விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 16 புதன்கிழமை (01.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 256

## ஊரடங்கை நீடிப்பது தொடர்பில் இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா



(கொழும்பு)
நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள ஊரடங்குச் சட்டத்தை செப்ரெம்பர் 6ஆம் திகதி தளர்த்துவதா? அல்லது நீடிப்பதா? என்பது தொடர்பில் இன்னமும் நாம் தீர் 15

## 9 ஆயிரத்தை கடந்த கொரோனா மரணங்கள்

### மேலும் 194 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)
இலங்கையில் கோவிட் தொற்றால் மேலும் 194 பேர் உயிரிழந்துள்ளனர்.
அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத் 15

## கொரோனா +4,221

(கொழும்பு)
கொரோனாத்தொற்று உறுதியான மேலும் 4,221 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
சுகாதார அமைச் 15

## கொரோனாவால் திணறும் யாழ்ப்பாணம்

# 24 மணி நேரத்தில் 375 பேருக்கு தொற்று

### மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)
**யாழ்.மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 375 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை அபாயகரமான சூழலை ஏற்படுத்தியுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.**

74 பேர் பிசிஆர் பரிசோதனையிலும் 301 பேர் அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையிலும் தொற்றாளர்களாக நேற்று மாலை 4 மணிவரை கண்டறியப்பட்டுள்ளதாக அரச அதிபர் அறிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், 15

## ரூபாயின் பெறுமதி பெரு வீழ்ச்சி

(கொழும்பு)
அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு நேற்று வரலாறு காணாத அளவிற்கு குறைந் 15

## கைதடி முதியோர் இல்லத்தில் 43 பேருக்கு கொரோனா

(குப்பிழான்)
கைதடி அரச முதியோர் இல்லத்தில் 43 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்தார்.
மேற்படி முதியோர் இல்லத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடத்தப் 15

## அபாய கட்டத்தில் வவுனியா மாவட்டம் 299 பேருக்கு கோவிட் தொற்று உறுதி

### 4 பேர் உயிரிழப்பு

(வவுனியா)
வவுனியாவில் கொரோனாவால் 4 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 299 பேருக்கு கோவிட் தொற்று ஏற்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
வவுனியாவில் இனங் காணப்பட்ட 15

## சுவர் இடிந்து விழுந்ததில் வவுனியாவில் சிறுவன் பலி



(வவுனியா)
வவுனியா பம்பைமடு பகுதியில் கொட்டகை ஒன்றின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் ஒன்றரை வயதான சிறுவன் ஒருவன் பலியாகியுள்ளான்.
குறித்தசம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. 15

## எல்லைதாண்டிய இந்திய இழுவை படகு மோதியதில்

### வல்வெட்டித்துறையில் இரு மீனவர்கள் காணாமல் போயுள்ளனர்

(முறிகண்டி)
வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியில் எல்லை தாண்டிய இந்திய இழுவைமடி படகு மோதியதில் இருவரைக் காணவில்லை, இருவர் கரைசேர்ந்துள்ளதாக நேற்று தகவல்கள் வெளியாகி 15

திருநெல்வேலியில்

## மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டோர் பொலிஸாரால் விரட்டியடிப்பு

06ஆம் பக்கம் பார்க்க

## ஆட்சி செய்ய உங்களால் முடியாவிட்டால் அதிகாரத்தை எங்களிடம் தாருங்கள்

### அரசிடம் சஜித் எம்.பி கோரிக்கை



(கொழும்பு)
ஆட்சி செய்ய உங்களால் முடியாவிட்டால் அதிகாரத்தை எங்களிடம் தாருங்கள் என அரசாங்கத்திடம் எதிர்க் கட்சித் தலைவர் சஜித்பிரேமதாஸ கோரிக்கைவிடுத்துள்ளார்.
தொடர்ந்தும் அவர் தெரி 15

## கொரோனாத் தொற்றால் வடக்கில் மேலும் 16 பேர் மரணம்

(யாழ்ப்பாணம்)
யாழில் 8 பேர் உட்பட வடக்கில் கொரோனாவால் 16 பேர் உயிரிழந் 15

# பொலிஸ் அதிகாரியின் மனைவி, மகன் கொரோனாத் தொற்றால் மரணம்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் இணைக்கப்பட்டிருந்த பொலிஸ் உதவிக் கண்காணிப்பாளர் (ஏஎஸ்பி) ஒருவரின் மனைவி மற்றும் அவர்களின் ஓரேயொரு மகனும் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலிஸ் அதிகாரியின் உயிரிழந்த மகன் ஒரு சட்ட மாணவர் ஆவார். கொரோனாத் தொற்றுடன் கொத்தலாவல பாதுகாப்பு அறிவியல் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். பொலிஸ் அதிகாரியின் மனைவி கடந்த வாரம் கொரோனாவால் உயிரிழந்தார்.

தொற்றுக்குள்ளான பொலிஸ் அதிகாரி தற்போது குண்டசாலை பொலிஸ் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகிறார். (ம-03)

### அதிபர்கள், ஆசிரியர்கள் போராட்டம் தொடரும்

# அரசின் 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு திட்டத்தை ஏற்க மாட்டோம்

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையை தீர்க்கும் அமைச்சரவை உப குழுவின் பரிந்துரைகளை இணைக்கும் வரை, 2018 ஆம் ஆண்டில் தேசிய சம்பள ஆணைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளை, 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்குவதற்கான அரசாங்கத்தின் முடிவை ஏற்றுக்கொள்ள முடியாது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், அதிபர்கள், ஆசிரியர்கள் போராட்டம் தொடரும் எனத் தெரிவித்துள்ளார்.

அனைத்து தொழிற்சங்கங்களுடன் கூட்டாக கலந்துரையாடி எதிர்கால நடவடிக்கை குறித்து முடிவு செய்வர் என ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

தொழிற்சங்கங்கள் எந்தவொரு கட்டாயத் தீர்வுகளையும் ஏற்காது என்பதை வலியுறுத்திய அவர், இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க அரசாங்கத்திற்கு அதிக நேரம் வழங்கப்படும் என்றார். (ம-03)

# பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை இன்றுமுதல் அதிகரிப்பு

## பாணின் விலை 5 ரூபாயால் உயர்வு

(யாழ்ப்பாணம்)

பாண் மற்றும் ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகள் இன்றுமுதல் அதிகரிக்கவுள்ளதாக யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பேக்கரி உற்பத்திப் பொருட்களின் மூலப்பொருட்களான கோதுமை மா, சீனி, தேங்காய் எண்ணெய், மாஜரின் போன்றவற்றின் விலைகள் சடுதியாக அதிகரித்ததன் காரணத்தினால் யாழ். அரச அதிபருடன் கலந்துரையாடி எமது நிலைப்பாட்டை தெரியப்படுத்தியதுடன் இன்று (01.09.2021) தொடக்கம் ஒரு இறாத்தல் பாணின் விலையை ஐந்து ரூபாயால் அதிகரிக்க தீர்மானித்ததுடன் எதிர்காலத்தில் மூலப்பொருட்களின் விலை குறைவடையும் பட்சத்தில் மீண்டும் பழைய விலைக்கு விற்பதற்கும் தீர்மானித்துள்ளதுடன் யாழ். மாவட்டத்தில் இடத்திற்கு இடம் பணிஸ் வகைகள் வேறுபட்ட விலைகளில் விற்பனை செய்வதால் உற்பத்தியாளர்களும் பாவனையாளர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

தற்போதைய பயணத் தடைக் காலத்தில் பாவனையாளரின் நன்மை கருதியும் விலை மாறுபாட்டைத் தடுக்கும் முகமாகவும் பேக்கரி உற்பத்திப் பொருட்களின் (பணிஸ் வகைகள்) ஆகக் கூடிய சில்லறை விற்பனை விலையாக பின்வரும் விலை விபரப்படி நடைமுறையில் உள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

அந்தவகையில் பாண் ஒரு இறாத்தல் 68 ரூபாய், ரீ பணிஸ் (ஒரு சோடி) 40 ரூபாய், பேஸ்ரி 40 ரூபாய், கிறீம் பணிஸ் 50 ரூபாய், கொம்பு பணிஸ் 40 ரூபாய், சங்கிலி பணிஸ் 40 ரூபாய், ஜாம் பணிஸ் 40 ரூபாய், கறி பணிஸ் 40 ரூபாய், முக்கோண பணிஸ் 40 ரூபாய், அடைக்கேக் 30 ரூபாய் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)


கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை

திருமதி உஷாஆனந்தி வித்திஆனந்தன்

அவர்களின் அன்பு மாமனார்

அமரர்

சம்பந்தர் இராசரத்தினம்



பிறப்பு : 1953.09.05

இறப்பு : 2021.08.28

அவர்கள் இறைவனடி சேர்ந்ததனால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(L-2602)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்

யா / செங்குந்த இந்துக் கல்லூரி


# கிளிநொச்சி பகுதியில் 7 கைக்குண்டுகள் மீட்பு



(முறிகண்டி)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் பகுதியில் 7 கைக்குண்டுகள் அடையாளம் காணப்பட்டன.

அக்கராயன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வன்னேரிக்குளம் பகுதியில் வயல் நிலத்தை பண்படுத்திக் கொண்டிருந்த நிலையில் நேற்றுப் பகல் குறித்த கைக்குண்டுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறித்த விடயம் தொடர்பில் காணி உரிமையாளரால் அருகில் உள்ள இராணுவத்தினருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து இராணுவத்தினரால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

குறித்த கைக்குண்டுகளை பாதுகாப்பாக அடையாளப்படுத்திய பொலிஸார், அவற்றை அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் அனுமதிபெறப்பட்டு விசேட அதிரடிப்படையினர் மூலம் அவற்றை பாதுகாப்பான முறையில் அகற்றி செயலிழக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர். (ம-03,100)

# சந்தையில் சீனி தொடர்பாக மதிப்பாய்வு நடவடிக்கை

(கொழும்பு)

சீனிக் களஞ்சியசாலைகள் உள்ள பகுதிகள் மற்றும் சந்தையில் சீனி தொடர்பான மதிப்பாய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

நுகர்வோர் அதிகார சபையினால் இந்த பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கமைய தமது அதிகார சபையின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சகல களஞ்சியசாலைகளிலும் உள்ள சீனித் தொகை தொடர்பில் இதன்போது தரவுகள் சேகரிக்கப்படவுள்ளதாக குறித்த அதிகார சபையின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சீனியினைப் பதுக்கி வைத்து அதனை அதிக விலைக்கு சந்தையில் விற்பனை செய்வதன் காரணமாக குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த தினங்களில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களின் ஊடாக 12,255 மெற்றிக் தொன் சீனி கைப்பற்றப்பட்டுள்ளது. (ம-03)

# கொரோனாப் பரவல் இரு வாரங்களில் குறையும்

## மருத்துவர் ஹேமந்த எதிர்வுகூறல்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் மற்றும் அதனால் ஏற்படும் மரணங்கள் எதிர்வரும் இரண்டு வாரங்களில் குறைவடைய வாய்ப்புள்ளதாக பிரதி சுகாதாரப் பணிப்பாளரும் சுகாதார அமைச்சின் பேச்சாளருமான மருத்துவர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் 10 நாட்களாக தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலாகியுள்ள நிலையில் தொற்றுப் பரவல் குறைந்திருக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (ம-03)

### மக்கள் ஒன்றுகூடியுள்ள இடங்களில்

# தண்ணீர் அருந்துவதற்குக்கூட முகக்கவசத்தை அகற்ற வேண்டாம்

## நாட்டு மக்களுக்கு சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

மக்கள் ஒன்றுகூடியுள்ள இடங்களில் தண்ணீர் அருந்தக்கூட முகக்கவசத்தை அகற்ற வேண்டாம் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெல்டா திரிபு மிக வேகமாக பரவுவதனால், வீட்டிலிருந்து வெளியேறுபவர்கள் மக்கள் கூடியிருந்தால் அந்த இடத்தில் தேநீர் அருந்தவோ அல்லது தண்ணீர் அருந்தவோ முகக்கவசத்தை அகற்ற வேண்டாம் என சுகாதார இராஜாங்க அமைச்சரான விசேட வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே வலியுறுத்தியுள்ளார்.

இதுவரையில் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் ஏதேனும் ஒரு தடுப்புசியைப் பெற்றுக் கொள்ளுமாறு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எந்த வகையான தடுப்பூசி என்று பார்த்துக்கொண்டிருக்காமல் அருகிலுள்ள தடுப்பூசி செலுத்தல் மையத்திற்கு சென்று ஏதேனும் ஒரு தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என இராஜாங்க அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

ஊடகங்களிடம் கருத்து தெரிவித்தபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ம-03)

# மிகவும் மோசமான உணவுப் பற்றாக்குறையை

# நாடு எதிர்கொள்ளும் அபாயம்

## பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை

(கொழும்பு)

**அரசாங்கத்தின் திட்டமிடப்படாத செயற்பாடுகளால் பாரிய உணவுப் பற்றாக்குறை ஏற்படவுள்ளதாக எதிர்க்கட்சி அபாய அறிவிப்பை வெளியிட்டுள்ளது.**

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கஇதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்,

உலக சந்தையில் சீனியின் விலையை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில், இலங்கையில் அனைத்துச் செலவுகளையும் சேர்த்ததன்பின்னர் ஒரு கிலோ கிராம் சீனியை 98 ரூபாவிற்கு சந்தைக்கு வழங்க முடியும்.

ஆனால் அரசாங்கத்தினால் அதற்கு நெருக்கமானவர்களுக்கு வழங்கிய முறைகேடான வாய்ப்புக்கள் மற்றும் கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்திலிருந்து இடம்பெற்று வரும் பாரிய சீனிமோசடி ஆகியவற்றின் காரணமாகவே தற்போது ஒரு கிலோ கிராம் சீனியின் விலை 220 ஆக அதிகரித்துள்ளது.

அதுமாத்திரமன்றி உரியவாறான திட்டமிடல்கள் அற்ற அரசாங்கத்தின் செயற்பாடுகளால் நாட்டின் பயிர்ச்செய்கையும் சீர்குலையும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது.

எனவே எதிர்வரும் சில மாதங்களுக்குத் தேவையான உணவுற்பத்தியை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் விரைந்து முன்னெடுக்கப்படாவிட்டால், எதிர்வரும் ஒக்டோபர் மாதமளவில் நாடு மிகமோசமான உணவுப்பற்றாக்குறையை எதிர்கொள்ளும் என அவர் எச்சரித்துள்ளார். (நி-5)

## அசாத் சாலிக்கு விளக்கமறியல் நீடிப்பு



(கொழும்பு)

முன்னாள் ஆளுநர் அசாத் சாலியை செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தரவு பிறப்பித்துள்ளது. (நி-5)

## திருமண நிகழ்வில் பங்கேற்ற 15 பேர் தனிமைப்படுத்தலில்

(ஹற்றன்)

நுவரெலியா மாவட்டம், கொட்டகலை பிரதேசத்தில், தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி திருமண நிகழ்வு நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் குறித்த நிகழ்வில் பங்கேற்ற 15 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் கொட்டகலை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது. (நி-5)

### காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்

## அரசியல் தேவைகளுக்காகவே பயன்படுத்தப்படுகிறது- திஸ்ஸ



(கொழும்பு)

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு காணாமல் போனோர் விடயத்தில் தீர்வு காண முடியாது. பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் இதுவரை காலமும் இரு தரப்பினராலும் அரசியல் தேவைக்காக மாத்திரம் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது.

காணாமல் போனோர் விவகாரத்தில் உண்மைத் தன்மையுடன் செயற்பட்டால் மாத்திரமே ஒரு தீர்வு காண முடியும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

யுத்த காலத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

யுத்தத்தில் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் உண்மையான தரவுகள் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை. ஒவ்வொரு தரப்பினரும் மாறுப்பட்ட வகையில் தரவுகளை சமர்ப்பித்துள்ளனர்.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கப் பெற வேண்டும். இதில் இன வேறுபாடுகள் பார்க்கக்கூடாது. 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவு பெற்ற காலத்தில் இன்று வரை காணாமல் போனோர் தொடர்பில் பேசப்படுகிறதே தவிர உறுதியான தீர்வு எடுக்கப்பட வில்லை.

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்விடயத்திற்கு ஒரு போதும் தீர்வை பெற முடியாது. பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை இதுவரை காலமும் இரு தரப்பினரும் தங்களின் அரசியல் தேவைக்காக மாத்திரம் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

யுத்த காலத்தில் புலம்பெயர்ந்துள்ளவர்களும் தங்களின் ஆள் அடையாளங்களை உறுதிப்படுத்துவதற்கு முன்வருவதில்லை. இவ்வாறான ஒரு சில விடயங்களும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் இழுபறி நிலையில் இருப்பதற்கு ஒரு காரணியாக உள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளுக்கு நியாயம் வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. தமது உறவுகளுக்கு என்னாயிற்று என்பதை அறிந்து கொள்ளும் உரிமை நீதி கேட்டும் போராடுபவர்களுக்கு உண்டு. ஆகவே காணாமல் போனோர் விடயத்தில் தீர்வு காண வேண்டுமாயின் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து ஒரு கொள்கைக்கமைய செயற்பட வேண்டும் என்றார். (நி-5)

# மரண அறிவித்தல்

## திரு. துரைராசா நந்தபாலன் (நந்தன்)



பிறப்பு: 1977.12.10

இறப்பு: 27.08.2021

பருத்திக்கலட்டி சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. துரைராசா நந்தபாலன் 27.08.2021 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசா- கிருஸ்ணலீலா தம்பதியரின் அன்பு மகனும், இராசரத்தினம் - புஸ்கலாதேவி தம்பதியரின் பாசமிகு மருமகனும் திருமதி கார்த்திகா அவர்களின் அன்புக் கணவரும் சதீசன், ரேணுஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தரணிராம், ஜீவதர்சினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.09.2021 இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பருத்திக்கலட்டி, சுன்னாகம். தகவல்: 0776216452 குடும்பத்தினர்

(836)

# அமெரிக்க ஓபன் டென்னிஸ்

## அடுத்த சுற்றில் சிட்சிபாஸ்



அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் ஆண்களுக்கான முதல் சுற்றுப் போட்டிகள் நடைபெற்றன. இதில்பிரிட்டனை சேர்ந்த ஆண்டி முர்ரே, கிரீசை சேர்ந்த ஸ்டெபனோஸ் சிட்சிபாஸுடன் மோதினார்.

முதல் செட்டை முர்ரே 6-2 என கைப்பற்றினார். அதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக இரண்டாவது செட்டை சிட்சிபாஸ் 7-6 என வென்றார். இதனால் சுதாரித்துக் கொண்ட முர்ரே மூன்றாவது செட்டை 6-3 என கைப்பற்றி அசத்தினார்.

இதையடுத்து ஆக்ரோஷ ஆட்டத்தை வெளிப்படுத்திய சிட்சிபாஸ் நான்காவது மற்றும் ஐந்தாவது செட்டை 6-3, 6-4 என வென்றார். இறுதியில், சிட்சிபாஸ் 2-6, 7-6, 3-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் வென்று முர்ரேவுக்கு அதிர்ச்சி அளித்தார். 4.30 மணி நேரம் நடந்த இந்த போட்டியில் வென்றதன் மூலம் சிட்சிபாஸ் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.




வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அனைத்துலக நாளையொட்டி நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றையதினம் அதன் ஆதரவாளர்களால் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி கவனயீர்ப்புப் போராட்டமொன்று லண்டன் மாநகரில் நடைபெற்றது.

# தென்னாபிரிக்க தொடருக்கான இலங்கை அணி அறிவிப்பு

## சந்திமலுக்கு வாய்ப்பு



தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணிக்கெதிரான வரையறுக்கப்பட்ட ஓவர்கள் கொண்ட தொடர்களுக்கான 22 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணியில் முன்னாள் தலைவர் தினேஷ் சந்திமல் மீண்டும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் மார்ச்- ஏப்ரல் மாதங்களில் மேற்கிந்திய தீவுகள் சுற்றுப் பயணத்திற்குப் பிறகு சந்திமல் இலங்கை அணிக்காக விளையாடவில்லை.

இதேபோல, கொவிட்-19 தொற்றுக்கு நேர்மறைசோதனை செய்த பிறகு தனிமைப்படுத்தப்பட்ட குசல் பெரேராவும் அணியில் இணைந்துள்ளார்.

லஹிரு மதுஷங்க, மகேஷ் தீக்ஷன மற்றும் புலின தராங்க ஆகியோர் இலங்கை அணியில் புதுமுக வீரர்களாக களமிறங்கவுள்ளனர். தசுன் ஷனகா தலைமையிலான அணியில், தனஞ்சய டி சில்வா, குசல் பெரேரா, தினேஷ் சந்திமால், அவிஷ்க பெர்னாண்டோ, பானுக ராஜபக்ஷ, பத்தும் நிசங்க, சரித் அசலங்க, வனிந்து ஹசரங்க, கமிந்து மெண்டிஸ், மினோத் பானுக, ரமேஷ் மெண்டிஸ், சாமிக கருணாரத்ன, நுவான் பிரதீப், பினுர பெர்னான்டோ, துஷ்மந்த சமீர, அகில தனஞ்சய, பிரவீன் ஜெயவிக்ரம, லஹிரு குமார, லஹிரு மதுஷங்க, புலின தராங்க, மகீஷ் தீக்ஷன ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (4)

# பின்னி ஓய்வு



இந்திய கிரிக்கெட் அணியின் ஆல் ரவுண்டர் ஸ்டுவர்ட் பின்னி அனைத்து வகையான கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

ஸ்டுவர்ட் பின்னி இந்திய அணிக்காக 2014-16 ஆம் ஆண்டுகளுக்கு இடையே 6 டெஸ்ட் போட்டிகள், 14 ஒருநாள் சர்வதேச போட்டிகள், 3 இருபது-20 சர்வதேச போட்டிகளில் ஆடியுள்ளார்.

ஸ்டுவர்ட் பின்னியின் மறக்க முடியாத ஒரு பந்து வீச்சு எது என்றால் 2014 இல் வங்கதேசத்துக்கு எதிராக ஒருநாள் போட்டி ஒன்றில் அனில் கும்ப்ளேயின் சிறந்த பவுலிங் சாதனையை முறியடித்தார். (4-6)

# நான்காவது டெஸ்டில்

## வோக்ஸ், பிளிங்ஸ் இணைவு

இந்தியக் கிரிக்கெட் அணிக்கெதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில் விளையாடும், எதிர்பார்ப்பு மிக்க இங்கிலாந்து கிரிக்கெட் அணி விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 15பேர் கொண்ட அணியில், சகலதுறை வீரரான கிறிஸ் வோக்ஸ் மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

2020 ஆம் ஆண்டின் இங்கிலாந்தின் சிறந்த வீரரான வோக்ஸ், 12 மாதங்களுக்கு மேலாக டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடவில்லை. ஏனெனில் கிரிக்கெட் சபையின் ஓய்வு மற்றும் சுழற்சிகொள்கை, குதிகால் காயம் ஆகியவற்றினால் இந்த தொடரின் முதல் மூன்று டெஸ்ட் போட்டிகளில் இருந்து அவர் விலகினார். இருப்பினும், அவர் இப்போது உடற்தகுதிக்கு திரும்பியுள்ளார்.

இதேவேளை, விக்கெட் காப்புதுடுப்பாட்ட வீரரான ஜோஸ் பட்லர், தனது சொந்த காரணங்களுக்காக நான்காவது டெஸ்ட் போட்டியிலிருந்து விலகியுள்ளார். இதனால் அவருக்கு பதிலாக இந்த அணியில், சேம் பிளிங்ஸ் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் இரு அணிகளுக்கிடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் நாளை மறுதினம் ஓவல் மைதானத்தில் நடைபெறவுள்ளது. (4-6)



# பிரிட்டிஷ் கிராண்ட் பிரிக்ஸ்; குவார்டாரோ முதலிடம்

மோட்டோ ஜிபி தொடரின் பிரிட்டிஷ் கிராண்ட் பிரிக்ஸ் பந்தயத்தில், யமஹா அணியின் ஃபேபியோ குவார்டாரோ முதலிடம் பிடித்துள்ளார்.

இரசிகர்களின் விருப்பவிளையாட்டாக இரசிக்கப்படும் மோட்டோ ஜிபி பந்தயம், ஆண்டுக்கு 19 சுற்றுகளாக பல்வேறு நாடுகளில் நடைபெறும்.

அந்த வகையில் ஆண்டின் 12ஆவது சுற்றான பிரிட்டிஷ் கிராண்ட் பிரிக்ஸ் பந்தயம், நேற்று முன்தினம் சில்வர்ஸ்டோன் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெற்றது.

இதில் பந்தய தூரத்தை நோக்கி, 21 வீரர்கள் மோட்டார் சைக்கிள்களில் சீறிபாய்ந்தனர்.

இதில், யமஹா அணியின் ஃபேபியோ குவார்டாரோ பந்தய தூரத்தை 40 நிமிடங்கள், 20.579 வினாடிகளில் கடந்து முதலிடத்தை பிடித்தார். அத்தோடு முதலிடத்திற்கான 25 புள்ளிகளையும் அவர் பெற்றுக் கொண்டார்.

பதின் மூன்றாவது சுற்றான அரகோன் ஜிபி, எதிர்வரும் செப்டம்பர் மாதம் 12ஆம் திகதி சியுடாட் டெல் மோட்டார் டி அராகன் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது. (4-6)



# இராசிபலன்

01.09.2021
ஆவணி 16, புதன்கிழமை
தசமி பின்னிரவு 5.24 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 12.45 மணிவரை
சுபநேரம் -4.35-6.05 மணிவரை
இராகுகாலம் 12.05-1.35 மணிவரை
சந்திராஷ்டமம்- அனுசம், கேட்டை

வளவன்

**மேஷம்**
உறவினர்களின் உதவியால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், பகையொன்று நட்பாகலாம், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்,வருமானம் திருப்தி தரும்.

**ரிஷபம்**
தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்**
விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், உடல் நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலையுண்டு, கற்பனை மிகுதியான நாள், உறவினர் சந்திப்புண்டு.

**கடகம்**
மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மனதில் சிறுசிறு சஞ்சலங்கள் தோன்றி மறையும்.

**சிம்மம்**
இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**கன்னி**
தொழிலில் புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**துலாம்**
உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**விருச்சிகம்**
வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களை முடிப்பதில் சில சிரமங்கள் ஏற்படலாம், பொது வாழ்வில் சில முரண்பாடுகள் தோன்றி மறையும்.

**தனுசு**
நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு , நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்,ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர்.

**மகரம்**
சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், கனிவாகப்பேசி காரியம் சாதிப்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்**
பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மீனம்**
புதிய நபர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், குடும்ப தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

வாழ்க்கை உன்னைச் சுமையாக நினைப்பதில்லை

# கிடைக்கும் தடுப்பூசியை விரைவாகப் பெறுங்கள்

## வைத்திய கலாநிதி சந்திம வேண்டுகோள்

(கொழும்பு)

**புதிய வைரஸ் திரிபுகளினால் நாட்டுக்கு பிரச்சினை ஏற்படாவிட்டால் ஒக்டோபர் இறுதியாகும் போது குறிப்பிடத்தக்க அளவு கொவிட் மரணங்கள் குறைவடையும் சாத்தியம் இருக்கின்றது. அதற்காக கொவிட் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை மேலும் துரிதப்படுத்த வேண்டும் என வைத்திய கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.**



நாட்டின் தற்போதைய நிலைமையில் கொவிட் தொற்றாளர்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கை குறைவடையும் சாத்தியம் தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

கொவிட் புதிய திரிபுகள் ஏற்படுவது தொடர்பில் நாங்கள் தொடர்ந்து எச்சரிக்கை விடுத்து வருகின்றோம். வைரஸ் தொற்று தீவிரமாக பரவும் நிலையில் உலகில் பெரும்பான்மையான மக்கள் கொவிட் தடுப்புசி ஏற்றிக்கொள்ளும் வரைக்கும் புதிய திரிபுகள் ஏற்படுவதை யாராலும் தடுக்க முடியாது.

மேலும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்புசி ஏற்றும் வேலைத்திட்டம் செப்டெம்பர் ஆரம்பமாகும் போது நூறு வீதம் பூரணமாகும் என சுகாதார அமைச்சு அறிவித்திருக்கின்றது.

கிடைக்கும் தடுப்புசியை விரைவாக பெற்றுக்கொண்டு, மக்கள் தங்களது பொறுப்பை நிறைவேற்றவேண்டும். அதன் மூலமே நாட்டில் இலகுவான நிலைமையை ஏற்படுத்துவதற்கு முடியுமாக இருக்கும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 780 மில்லியன் அமெரிக்க டொலர்

(கொழும்பு)

இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பை மேலும் பலப்படுத்துவதற்காக, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து, பணமாக மாற்றக்கூடிய எஸ்.டி.ஆர் எனப்படும் விசேட மீள்செலுத்துதல் உரிமைகளின்படி, 780 மில்லியன் டொலர் நிதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், 300 மில்லியன் டொலர் கடன் சீன அபிவிருத்தி வங்கியினால் நாட்டுக்கு கிடைக்கப்பெறவுள்ளதாக நிதிஅமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

இது குறித்து தமது டுவிட்டர் தளத்தில் கருத்து தெரிவித்துள்ள நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், இந்த நிதி கிடைப்பதன்மூலம், நாட்டின் அந்நியச் செலாவணி சந்தையின் பணப்புழக்கமும், ஸ்திரத்தன்மையும் பரிமாற்ற விகிதத்தின் மூலம் அதிகரிக்கும் என்று தெரிவித்துள்ளார்.(நி-5)

# தடுப்பூசி பெற்ற 103 வயது மூதாட்டி

(கொழும்பு)

இலங்கையில் 103 வயது மூதாட்டி ஒருவருக்கும் கொரோனாத் தடுப்புசி ஏற்றப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான தடுப்புசிஏற்றும் திட்டம் இலங்கையில் துரித வேகத்தில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. இதில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு முன்னுரிமை முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

தடுப்புசி நிலையங்களுக்கு வரமுடியாத முதியவர்களுக்கு வீடுகளுக்கே சென்று தடுப்புசி ஏற்றப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் 103 வயதுடைய மூதாட்டி ஒருவருக்கும் நேற்று முன்தினம் வீட்டுக்கே சென்று சுகாதாரத் தரப்பினரால் தடுப்புசி வழங்கப்பட்டுள்ளது.

பதுளை பகுதியிலுள்ள குறித்த மூதாட்டியின் வீட்டுக்குச் சென்று சுகாதார அதிகாரிகள் தடுப்புசியைச்செலுத்தினர்.(நி-5)

# வேலணை நகரத்தின் அபிவிருத்தி பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் எண்ணக்கருவுக்கு அமைவாக பெருநகர அபிவிருத்தி அமைச்சு மேற்கொள்ளும் நாட்டின் 100 நகரங்களை அழகு படுத்தும் திட்டத்தில், யாழ் மாவட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள வேலணை நகரத்தின் அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பணிகளுக்கான பூர்வாங்க ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக நகர அபிவிருத்திஅதிகாரசபையின் அதிகாரிகள் கள விஜயமொன்றை நேற்று மேற்கொண்டனர்.

மேலும் இத் திட்டத்தின்கீழ், வேலணை, சாவகச்சேரி, கொடிகாமம், நாவற்குழி, நெல்லியடி, மருதனார்மடம் ஆகிய 6 பிரதேசங்கள் உள் வாங்கப்பட்டுள்ளதோடு முதற்கட்டமாகவேலணை, கொடிகாமம், நாவற்குழி, மருதனார்மடம் ஆகிய 4 பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்பட வுள்ளன.

நாட்டில் 100 நகரங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கில் சுமார் 2000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் ஒரு பிரதேசத்தை பல்பரிமாண நகராக்குவதற்கு முதற்கட்டமாக 20 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது. (4-7)

## யாழ்.போதனாவில்

# தொற்றாளர்கள் அதிகரிப்பு நிரம்பியது விடுதிகள்!

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகரித்து வரும் கொவிட்-19 நோய்த்தொற்றுக் காரணமாக மருத்துவமனைகளில் இட ஒதுக்கீடு முழுமையடைந்துள்ளன.**

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நிலவரப்படி கொவிட்-19 நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்ட 129 நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களில் 10 பேர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் மருத்துவக் கண்காணிப்புக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை, தெல்லிப்பழை, பருத்தித்துறை மற்றும் சாவகச்சேரி மருத்துவமனைகளிலும் கொவிட்-19 சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் கண்காணிக்கப்படுகின்றனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 129 கோவிட்-19 நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர். அங்கு அமைக்கப்பட்டு 2 அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளில் 10 கோவிட்-19 நோயாளிகள் தீவிர மருத்துவக் கண்காணிப்பில் சிகிச்சை பெறுகின்றனர்.

கொவிட்-19 நோயாளிகளின் உயிரிழப்பு அதிகரித்துள்ள நிலையில் தினமும் 5 சடலங்கள் போதனா மருத்துவமனை பிரேத அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரியின் சீரான ஒழுங்கமைப்பில் தினமும் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தோரின் சடலங்கள் கோம்பயன் மணல் மயானத்தில் சுகாதார விதிமுறைகளின் கீழ் எரியூட்டப்படுகின்றன. (4-7-18-33)

# மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரிகள் பொலிஸாரால் விரட்டப்பட்டனர்



(யாழ்ப்பாணம்)

கொரோனாத் தொற்று அதிகரிப்புக் காரணமாக நாடு முழுவதும் தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருநெல்வேலி- சிவன் அம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறி மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கோப்பாய் பொலிஸாரால் அங்கிருந்து விரட்டப்பட்டனர்.

மேற்படி பகுதியில் மரக்கறி வியாபாரிகள் ஒன்றுகூடி விற்பனையில் ஈடுபடுகின்றமையால் பொதுமக்கள் ஒன்றுகூடி மரக்கறிகளைக் கொள்வனவு செய்து வந்தனர்.

இதுதொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து அங்கு கோப்பாய் பொலிஸார் விரைந்து சென்று அவர்களை அங்கிருந்து உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுத்தனர். (4-7-18-33)

# இந்திய படகுகளால் சேதமான வலைகளை எரித்து மீனவர் போராட்டம்



(கரணவாய்)

இந்திய மீனவர்களின் டோலர் படகுகளின் அத்துமீறலினால் வெட்டி சேதமாக்கப்பட்ட வலைகளை எரித்து நேற்றைய தினம் வடமராட்சி பகுதி மீனவர் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் உள்ளூர் மீனவர்களின் வலைகள் தொடர்ச்சியாக வெட்டப்பட்டு வருகின்றன. இதுதொடர்பில் உரிய அதிகாரிகள், கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்கும் மீனவர்களினால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை என மீனவர்கள் குற்றம் சாட்டிவருகின்றனர்.

இந்நிலையில் உள்ளூர் மீனவர்களின் வலைகள் தொடர்ச்சியாக அறுக்கப்பட்டு வருகின்றமை தொடர்பில் பார்வையிடுவதற்காக நேற்று யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா மற்றும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசங்களின் தலைவர் நா.வர்ணகுலசிங்கம் ஆகியோர் கொட்டடி மற்றும் முனைப் பகுதிகளுக்கு சென்று மீனவர்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது தொடர்ச்சியாக மீனவர்களின் வலைகள் வெட்டப்பட்டு வருவதாகவும் இதனால் தாம் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருவதாகவும் கூறி இந்திய ரோலர் படகுகளால் வெட்டப்பட்ட வலைகளை தீமூட்டி எரித்து மீனவர் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இதேவேளை நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு வடமராட்சி பகுதியைச் சேர்ந்த பன்னிரண்டு மீனவர்களின் வலைகள் இந்திய டோலர் படகுகளினால் சேதமாக்கப்பட்டுள்ளது. (4-7-60)




## அழகு வேலா விரைந்திடுவாய்

நல்லை கந்தன் அலங்காரம்
நலம் தர வந்தான் திருமுருகன்
பொல்லா வினையும் பறந்தோட
வேலாய் முருகன் திருக்கோலம்

அழகு வேலா விரைந்திடுவாய்
அடியார் தம்மை காத்திடுவாய்
கொடிய கொரோனா தொற்றிலிருந்து
அகிலம் தன்னை மீட்டிடுவாய்

த. லக்ஸ்மன்
நல்லூர்

## எல்லாமேயுன் திருவிளையாடல் தானா?

எல்லாமேயுன் திருவிளையாடல் தானா!
நல்லூர் முருகா எமைக்காக்க ஓடிவா!
தொல்லை வினை நீக்க தொழுது பணிகின்றோம்!
தமிழர் நலம்காக்க நிலம் காக்க ஓடிவா!

இமைப்பொழுதும் எம் நெஞ்சம்
ஏங்கித் தவிக்கின்றோம்!
உமை நாடும் பக்தர் வாழ்வில்
விடிவு வாராதா அருள் செய்குவாய்!

பன்னிரண்டு விழிகளுமேன் பார்க்கவில்லை?
பகலிரவாய்ப் பணிந்தும் பலனில்லையா!
பன்னிரண்டு கரங்களுமேன் அணைக்கவில்லை?
பரிதாப மோடு ஒருமுறை பார்த்திடுவாய்!

சி.சிவானந்தராஜா

## கலியுகக் கந்தன் காத்தருள் அநுபூதி

தஞ்சத்தருள் கந்தா போற்றி
பாடும் பணி கந்தா போற்றி
எல்லாம் மற கந்தா போற்றி
யானோ மனமோ கந்தா போற்றி
தலைப்பட்டு அழி கந்தா போற்றி
மக மாயைகளை கந்தா போற்றி

பணிவு வேலா வாழ்க
கெடுவாய் மனமே வேலா வாழ்க
மெய்ப்பொருள்பேசி வேலா வாழ்க
நிட்டுர நிராகுல வேலா வாழ்க
மா மடிய வேலா வாழ்க
கவியாகா வேலா வாழ்க

சி.யமுனாநந்தா



# துறைமுகத்தில் தேங்கியுள்ள 2187 மெற்றிக்தொன் சீனி

## கட்டணமின்றி விடுவிக்கத் தீர்மானம்



(கொழும்பு)

துறைமுகத்தில் தேங்கியுள்ள 2187 மெற்றிக்தொன் சீனி அடங்கியுள்ள 81 கொள்கலன்களை கட்டணமில்லாமல் விடுவிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

டொலர் பெறுமதி அதிகரித்துள்ளதால் அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்யும் போது இறக்குமதியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு அமைச்சரவை மட்டத்தில் தீர்வு காண எதிர்பார்க்கப்பட்டுள்ளது என துறைமுக மற்றும் கப்பற்துறை அபிவிருத்தி அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இவற்றை சதொச விற்பனை நிலையத்தின் ஊடாக மானிய விலையின் அடிப்படையில் விநியோகிக்க உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கொவிட் தாக்கத்தினால் அரசாங்கமும், நாட்டு மக்களும் பல நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள வேளையில் ஒரு சில மாபியாக்கள் அத்தியாவசிய பொருட்களை பதுக்கி வைத்து, அப்பொருளுக்கான கேள்விச்சந்தையில் அதிகரிக்கும் போது அதனை அதிக விலைக்கு விற்கிறார்கள்.

சீனியின் விற்பனை விலையும் இவ்வாறே அதிகரித்துள்ளது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)


சேவைநலன் பாராட்டு



கல்விச் சேவையில் 31 வருட கால தனது ஆசிரியப் பணியை நிறைவு செய்யும் பெருந்தகை

திருமதி.திலகவதி சிவானந்தம்

(SLTS I, Tr Primary, Dip.in. Counselling)

சேவை விபரம்

Best Wishes

22.03.1990-25.06.2000- யா/ மந்துவில் றோ.க.த.க.வித்தியாலயம்
26.06.2000-02.01.2001- யா/ சாவ. இந்து ஆரம்பப் பாடசாலை
03.01.2001-28.02.2010- யா/ மந்துவில் றோ.க.த.க. வித்தியாலயம்
01.03.2010-04.09.2011- யா/ [illegible] அ.மி.த.க. பாடசாலை
05.09.2011-24.01.2016- யா/ மந்துவில் றோ.க.த.க. வித்தியாலயம்
25.01.2016-31.08.2021- யா/ டிறிபேக் கல்லூரி

சகல வளங்களும் பெற்று பல்லாண்டு காலம் நோய் நொடியின்றி இல்லம் சிறக்க இன்பமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
வட்டமேசை,
யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி


# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

## விரதங்கள்

### துன்பங்களைப் போக்கும் புரட்டாதி சனிக்கிழமை



திருவேங்கடவன், கலியுகவரதன், பக்தர்களின் துன்பம் தீர்க்கும் தெய்வம் என்று அனைவராலும் பக்தியுடன் வணங்கப்படும் திருப்பதி ஏழுமலையான் கலியுகத்தின் கண்கண்ட கடவுளாக போற்றப்படுகிறார். "வேங்" என்றால் "பாவம்". "கடா" என்றால் "தீர்த்து வைக்கும் சக்தியுள்ளது" என்று பொருள்.

ஆதலால் திருப்பதிக்கு "வேங்கடாச்சலம்" என்ற பெயர் வந்தது. வேங்கடத்தின் கடவுளாகிய சீனிவாசனுக்கு "வேங்கடேஸ்வரன்" என்ற பெயர்.

தமிழ் மாதங்களில் 6 ஆவது மாதமாக புரட்டாதி வருகிறது. இது கன்னி இராசிக்குரிய மாதமாகும். புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமை பெருமாளுக்கு உகந்தது. அன்று நோன்பு நோற்று உபவாசம் இருப்பது வழக்கம்.

"உப" என்றால் "சமீபம்" என்று பொருள். "வாசம்" என்றால் "வசிப்பது" என்று பொருள். இறைவனுக்கு சமீபமாக செல்ல, நாம் நோன்பு நோற்கிறோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

புரட்டாதி மாதமும் மகாளய பட்சம் வருகிறது. மகாளய பட்சத்தில் மூதாதையர்களுக்கு திதி கொடுக்கிறோம். புரட்டாதி சனிக்கிழமைகளில் காக்கும் கடவுளாகிய திருமாலை வேண்டி விரதம் இருப்பதால் சனி பகவானால் ஏற்படும் தொல்லைகளில் இருந்தும், மூதாதையர்கள் (பித்ருக்கள்) சாபங்களில் இருந்தும் விடுபட பெருமாள் அனுக்கிரகம் செய்கிறார்.

புரட்டாதி சனிக்கிழமை விரதம் திருப்பதி ஏழுமலையானுக்கு மிகவும் உகந்தது. தசாவதாரத்தில் எந்த அவதாரத்திலும் சேராதது ஸ்ரீ வேங்கடேசன் அவதாரம். பக்தர்களின் நலனுக்காக அவர் திருமலையில் எழுந்தருளி இருக்கிறார். ஏழு மலையான் சீனிவாசன் என்ற பெயரில் பூமிக்கு வந்த கதை தெய்வாம்சம் மிக்கது. (தொடரும்)

# பொறுப்பை உணர்ந்து செயற்படாவிட்டால் உயிருக்கு ஆபத்து

## ரமேஷ் பத்திரண

(கொழும்பு)

பொறுப்பை உணர்ந்து செயற்படுமாறு சகலரிடமும் கேட்டுக் கொள்கின்றோம். அவ்வாறில்லை என்றால் அவர்களது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படக் கூடும் என அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த அமைச்சர் பத்திரண,

ஜனாதிபதி, கொவிட் கட்டுப்பாட்டு செயலணி மற்றும் சுகாதாரத் தரப்பினர் இவ்வாறான தீர்மானங்களை எடுப்பது குறித்த மதிப்பீடுகளிலேயே அதிக அவதானம் செலுத்துகின்றனர்.

எனவே நாட்டு மக்களின் ஒத்துழைப்புடன் அனைவரும் ஒன்றிணைந்து தற்போதைய நிலைமையை வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்வதன் மூலம் எதிர் வரும் வாரங்களில் மரணங்கள் மற்றும் தொற்றாளர்களின் எண்ணிக்கையை குறைக்க முடியும் என்று நம்புகின்றோம்.

எனினும் மக்கள் தமது சமூக பொறுப்பை மறந்து செயற்படுகின்றனர். நாட்டு மக்களின் ஒத்துழைப்பு இன்றி நிலைமையை முகாமைத்துவம் செய்ய முடியாது.

எனவே பொறுப்பை உணர்ந்து செயற்படுமாறு சகலரிடமும் கேட்டுக் கொள்கின்றோம். அவ்வாறில்லை என்றால் அவர்களது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படக் கூடும்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்தார். (நி-5)



தற்போதைய கொரோனா இடர்காலத்தில் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்களைக் கௌரவித்து தியாகி அறக்கொடை நிதியத்தின் இயக்குனர் வாமதேவன் தியாகேந்திரனின் நிதிப் பங்களிப்பில் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன. (படம்: ரவிசாந், சுமித்தி)

# காபூல் விமான நிலையத்திற்குள் நுழைந்த தலிபான்கள்

(காபூல்)

**தலிபான் உறுப்பினர்கள் "அல்ஹாவிற்கு நன்றி" என கூறியவாறு காபூல் விமான நிலையத்திற்குள் பிரவேசித்ததாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



அமெரிக்க படைகள் வெளியேறியதை கொண்டாடும் வகையில், தலிபான்கள் வானை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களை நடத்தி, தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருவதாக அந்த நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா முழுமையாக வெளியேறியதன் மூலம் எங்கள் நாடு முழுமையாக சுதந்திரம் பெற்றுள்ளது என தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் நேற்றுத் தெரிவித்திருந்தார். இந் நிலையில் தலிபான்கள் அமெரிக்காவுடன் நல்ல இராஜதந்திர உறவுகளைக் கொண்டிருக்க விரும்புவதாகவும் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் குறிப்பிட்டார்.

"இந்த வெற்றி அனைத்து ஆப்கானியர்களுக்கும் சொந்தமானது, நாங்கள் அமெரிக்காவுடனும் சர்வதேச நாடுகளுடனும் நல்ல உறவை விரும்புகிறோம். அவர்கள் அனைவருடனும் நல்ல இராஜதந்திர உறவை நாங்கள் வரவேற்கிறோம்" என்று ஜபிஹுல்லா முஜாஹித் கூறியதாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (7-4)



**காபூலில் அமெரிக்கா படைகளின் நடவடிக்கை முடிந்ததன் அடையாளமாக கடைசி அமெரிக்க வீரராக மேஜர் ஜெனரல் கிறிஸ் டோனாஹியு நேற்று சி-17 ரக விமானம் ஒன்றில் புறப்பட்டு உள்ளார் என தெரிவிந்து அவர் ஆயுதங்களுடன், இராணுவ சீருடை அணிந்து வெளியேறும் புகைப்படம் ஒன்றையும் அமெரிக்க பாதுகாப்பு துறை வெளியிட்டு உள்ளது.**

## சீனாவின் புதிய உத்தரவு

(பீஜிங்)

18 வயதுக்குட்பட்டவர்கள் வாரத்தில் 3 மணிநேரத்திற்கு மட்டுமே ஆன்லைன் விளையாட்டுகளை விளையாடவேண்டும் என சீன அரசு உத்தரவிட்டுள்ளது.

குழந்தைகள் ஆன்லைன் விளையாட்டுகளுக்கு அடிமையாவதைத் தடுக்கும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (7-4)

## ஆப்கானிஸ்தானும் 20 வருட மோதல்களும்

(காபுல்)

•2001 ஒக்டோபர் 7: அமெரிக்கா தலைமையிலான கூட்டணி ஆப்கானிஸ்தானில் தலிபான் மற்றும் அல்-காய்தா நிலையங்கள் மீது குண்டுகளை வீசியது.

•இலக்குகளில் காபுல், கந்தஹார் மற்றும் ஜலாலாபாத் ஆகியவை அடங்கும்.

• ஒரு தசாப்த கால சோவியத் ஆக்கிரமிப்புக்குப் பிறகு ஆட்சியைப் பிடித்த தலிபான், உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து, அல்-காய்தா தலைவர் ஒசாமா பின்லேடனை ஒப்படைக்க மறுத்தது.

•2001 நவம்பர் 13: வடக்கு கூட்டணி, கூட்டணிப் படைகளின் ஆதரவுடன் தலிபான் எதிர்ப்பு கிளர்ச்சியாளர்களின் குழு, காபுலைக் கைப்பற்றியது.

•2009 பெப்ரவரி 7: அமெரிக்க ஜனாதிபதிபராக் ஒபாமா ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பப்பட்ட படைகளின் எண்ணிக்கையில் பெரிய அதிகரிப்புக்கு ஒப்புதல் அளித்தார். அவர்கள் சுமார் 140,000 பேர்.

• 2020 பெப்ரவரி29: அமெரிக்கா மற்றும் தலிபான்கள் கட்டார் நாட்டின் தோகாவில் ஆப்கானிஸ்தானில் அமைதியை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

•தீவிரவாதிகள் ஒப்பந்தத்தை நிலைநாட்டினால் 14 மாதங்களுக்குள் அனைத்து படைகளையும் திரும்பப் பெற அமெரிக்கா மற்றும் நேட்டோ நட்பு நாடுகள் ஒப்புக் கொண்டன.

•2021 ஏப்ரல் 13: அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன், அனைத்து அமெரிக்கப் படைகளும் ஆப்கானிஸ்தானை விட்டு அந்த ஆண்டு செப்டம்பர் 11 -க்குள் வெளியேறும் என்று அறிவித்தார்.

• 2021 ஆகஸ்ட் 16: காபுல் உட்பட நாடு முழுவதும் உள்ள நகரங்கள் மற்றும் நகரங்களின் கட்டுப்பாட்டை தலிபான்கள் ஒரு மாதத்திற்குள் ஆப்கானிஸ்தான் முழுவதும் கைப்பற்றினர். ஆப்கானிஸ்தான் பாதுகாப்புப் படைகள் தலிபான் முன்னேற்றத்தை எதிர்கொண்டு சரிந்தன.

• 2021 ஆகஸ்ட் 31 காபுலின் ஹமீத் கர்சாய் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பிற்பகல் 3:29 மணியளவில் இறுதி போயிங் சி -17 குளோப் மாஸ்டர் விமானம் அமெரிக்க நோக்கி புறப்பட்டது.

•இதனால் ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் 20 வருட இருப்பு முடிவடைந்தது என்று அமெரிக்க பாதுகாப்புத்துறை உறுதி செய்தது.

•வெளியேற்றத்தை மேற்பார்வையிட்ட ஜெனரல் பிராங்க் மெக்கென்சி, அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகளால் சுமார் 123,000 பொதுமக்களை வெளியேற்ற முடிந்தது என்று கூறியுள்ளார். (7-4)

## அமெரிக்காவின் ஒப்பந்தத்தை மீறி மீண்டும் அணு ஆயுத திட்டத்தை தொடங்கிய வடகொரியா

(பியொங்யாங்)

வட கொரியா தனது அணு ஆயுதத் திட்டங்களை மீண்டும் தொடங்கியிருப்பதாகத் தெரிகிறது என்று ஐ.நா.வின் சர்வதேச அணுசக்திக் கண்காணிப்பு அமைப்பு (ஐஏஇஏ) கவலை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வட கொரிய தலைநகர் பியாங்கியாங்குக்கு வடக்கே, யாங்பையான் பகுதியில் அமைந்துள்ள அந்த நாட்டின் முக்கிய அணு உலையில் மீண்டும் செயற்பாடுகள் தொடங்கப்பட்டுள்ளதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

கடந்த பெப்ரவரி முதல் ஜூலை மாதம் வரை யாங்பையான் அணு மையத்திலுள்ள கதிர்வீச்சு இரசாயன ஆய்வகமும் செயற்படுத்தப் பட்டதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இது மிகவும் கவலையளிக்கும் அறிகுறிகளாகும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்களது அணு ஆயுதங்களைக் கைவிடுவதாக வட கொரிய அதிபர் கிம் ஜோங்-உன் கடந்த 2019-ஆம் ஆண்டு தொடக்கத்தில் அறிவித்தார். அதற்குப் பதிலாக தங்கள் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டும் என்று அவர் அமெரிக்காவிடம் வலியுறுத்தினார்.

வட கொரியா தங்களது அணு ஆயுதங்களை முழுமையாகக் கைவிட்ட பிறகுதான் பொருளாதாரத் தடைகளை நீக்க முடியும் என்று டிரம்ப் திட்டவட்டமாகக் கூறிவிட்டதால் இரு தரப்பினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து, அமெரிக்காவிடம் ஒப்புக்கொண்டதை மீறி மீண்டும் அணு ஆயுதத் திட்டங்களைத் தொடங்கப் போவதாக வட கொரியா மிரட்டல் விடுத்து வந்தது.

இந்த நிலையில், அந்தத் திட்டங்கள் தொடங்கப்பட்டதற்கான அறிகுறிகள் தென்படுவதாக ஐஏஇஏ தற்போது கவலை தெரிவித்துள்ளது. (7-4)

## வியட்நாமுக்கு 100 மெட்ரிக்தொன் ஒட்சிசன் வழங்கிய இந்தியா

(புதுடெல்லி)

தென்கிழக்கு ஆசிய நாடான வியட்நாமுக்கு 100 மெட்ரிக் தொன் திரவ மருத்துவ ஒட்சிசன், 300 ஒட்சிசன் கன்டெய்னர்களை இந்தியா வழங்கியுள்ளது. அந்நாட்டில் கொரோனாவுக்கு சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு உதவும் வகையில் இந்தியா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் ஐராவதி போர்க் கப்பல் மூலம் வியட்நாமின் ஹோ சிமின் நகரத்துறைமுகத்துக்கு ஒட்சிசன் கன்டெய்னர்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அவை வியட்நாமுக்கு சென்றடைந்த தகவலை வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் சுட்டுரையில் பகிர்ந்து கொண்டார்.

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் தேவைப்படும் உதவிகள் தொடர்பாக வியட்நாம் அரசு விடுத்த கோரிக்கையை ஏற்று இந்தியா இந்த உதவியை அளித்துள்ளது.

வியட்நாமையொட்டிய தென் சீனக் கடல் பகுதியில் இந்தியா எண்ணெய் துரப்பரவுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், அந்த பிராந்தியத்தில் சீனாவின் அச்சுறுத்தலை வியட்நாம் எதிர்கொண்டு வருகிறது. இதனால், இந்தியாவின் நட்புறவை அந்நாடு அதிகம் நாடி வருகிறமை குறிப்பிடத்தக்கது. (7-4)

## மன்னார் மாவட்டத்தில்

# அதிகரிக்கும் கொரோனா மரணங்கள் எரிப்பதற்கு மயானமின்றி தவிக்கும் மக்கள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கொரோனாப் பரவல் தொடர்ந்து அதிகரித்து வருகின்ற நிலையில் கொரோனாத் தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்டு இதுவரை 19 நபர்கள் மரணமடைந்துள்ளனர்.

தொடர்ச்சியாக மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற நிலையில் மன்னார் மாவட்டத்தில் இறந்தவர்களை எரிப்பதற்கான ஏற்பாடுகள் இன்மையால் இறந்தவர்களின் உடலங்களை வவுனியா சென்று எரிக்க வேண்டிய அவல நிலை காணப்படுகின்றது.

மன்னார் நகர சபைக்குச் சொந்தமான மயானத்தில் எரிப்பதற்கான எந்த வசதியும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இதன் காரணமாக மன்னாரில் இறந்தவர்களின் உடலை வாகனம் மூலம் வவுனியா எடுத்துச் சொல்ல வேண்டியுள்ளதுடன் வவுனியாவில் மின்சாரத்தில் தகனம் செய்வதற்கு பெரிய தொகை நிதிசெலுத்த வேண்டிய நிலை காணப்படுவதாக இறந்தவர்களின் உறவினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த நிலை மேலும் தொடர்ந்தால் ஏழை மக்கள் இறந்தவர்களை வீதிகளில் எரிக்க வேண்டிய நிலை தான் ஏற்படும் என விசனம் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே கொரோனா காரணமாக நிதிச் சுமையில் இருக்கும் மக்கள் தற்போது இறந்தவர்களை உரிய மரியாதையுடன் அடக்கம் அல்லது தகனம்கூட செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

எனவே இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு விரைவில் இறந்தவர்களை மன்னாரில் தகனம் செய்வதற்கான ஏற்பாட்டை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(7-4-285)

# மின் தகன நிலையம் அமைக்க அனைவரது ஒத்துழைப்பும் தேவை

## மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கோரிக்கை

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தில் உடனடியாக மின் தகன நிலையத்தை அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமையினால் மாவட்டத்தில் உள்ள அனைவரின் ஒத்துழைப்பும் தேவை என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேல் தெரிவித்தார்.**

மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற கலந்துரையாடலை தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது கொவிட்-19 தொற்றும் மரணங்களும் அதிகரித்துச் செல்லும் சூழ்நிலையில், மன்னார் மாவட்டமும் இதற்கு விதிவிலக்கு இல்லை என்ற வகையில் ஏனைய மாதங்களை விட ஓகஸ்ட் மாதத்தில் கொவிட் தொற்றாளர்களும், மரணங்களும் அதிகரித்துள்ளன.

மாவட்டத்தில் ஒரே நாளில் நான்கு கொவிட்-19 மரணங்களும் இடம்பெற்றுள்ளன. இந்தச் சூழ்நிலையில் நாங்கள் இறந்தவர்களின் உடலை மின் தகனம் செய்வதற்கு வவுனியாவிற்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

ஏனைய மாவட்டங்களில் இருந்தும் சடலங்கள் தகனம் செய்ய வவுனியாவிற்கு கொண்டு செல்லப்படும் நிலையில் வவுனியாவில் உள்ள மின் தகன இயந்திரத்தின் செயற்திறன் குறைவடைந்துள்ள நிலையிலும், குறித்த விடயம் எமக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் உடனடியாக மின் தகன நிலையத்தை அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இடம்பெற்ற இக் கலந்துரையாடலுக்கு அமைவாக மின் தகன நிலையத்தை மன்னார் நகரசபை பிரிவில் உள்ள மன்னார் பொது மயானப் பகுதியில் அமைக்க முடிவு எடுத்துள்ளோம். மின் தகன நிலையத்தை அமைப்பதற்கும் வாகனத்திற்கு பணம் கொடுத்து சடலங்களை அனைவராலும் ஏற்றி வர முடியாது என்பதனால் வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்யவும் சுமார் 30 மில்லியன் ரூபாய் நிதி தேவைப்படுகிறது.

மன்னார் நகர சபை மற்றும் பிரதேச சபைகள் தங்களால் இயன்ற நிதியுதவியை வழங்குவதாகத் தெரிவித்துள்ளன.

நிதி போதாமை காரணமாக அரச சார்பற்ற அமைப்புக்கள், வெளிநாட்டில் உள்ள நண்பர்கள், தனவந்தர்கள் முன் வந்து உதவிசெய்ய முன்வர வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

(7-4-285)




சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் நேற்று முன்தினம் இரவு மன்னார் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளோடு இணைந்து மன்னார் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் தீபம் ஏற்றி கவனயீர்ப்பு நிகழ்வுகள் இடம் பெற்றன. (படம்: ஜோசப் நயன்)

# உவர் நீரின் தாக்கத்தினால் இடம்பெயர்ந்த குஞ்சிக்குள மக்கள்

(தருமபுரம்)

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வன்னேரி சோலை எனும் கிராமத்தின் அருகில் உள்ள குஞ்சிக்குளத்தின் கீழ் பாரம்பரியமாக விவசாயத்தை தன்னகத்தே கொண்டு வாழ்ந்து கொண்டிருந்த குஞ்சிக்குளம் கிராம மக்கள் உவர் நீரின் தாக்கத்தினால் குஞ்சிக்குளம் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து பல வருடங்களாக சோலை கிராமத்தில் வாழ்ந்து வருகிறார்கள்.

குஞ்சிக்குளம் கிராமத்தில் பாடசாலைகள், சிறு உப தபால் நிலையங்கள், வீடுகள், கிணறுகள், 500 ஏக்கருக்கு மேல் விவசாய நிலங்கள் மற்றும் கோவில்கள் எனப் பல இடங்கள் உவர் நீரினால் தாக்கமடைந்து காணப்படுகிறது என்று குஞ்சிக்குளம் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிராமத்திற்கு மண்டக் கல்லாறு பகுதியிலிருந்து வருகின்ற நீரினால் எமது விவசாய நிலங்கள் முழுவதும் உவர் நிலமாக மாறி வருகிறது. எனவே எமது பகுதிகளுக்கு உவர் நீத் தடுப்பணை அமைத்து தரும்படி தெரிவித்தபோதும் இதுவரை காலமும் அமைத்துத் தரவில்லை என ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.

நிலமிருந்தும் விவசாயத்தை மேற்கொள்ள முடியாமல் இருக்கின்றோம். எமக்கு உவர் நீர் த்தடுப்பணை அமைத்துத் தாருங்கள் என்று குஞ்சிக்குளம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (7-4-316)

# வடக்கில் உள்ள விகாரைகளுக்கு புத்தர் சிலை வழங்க நடவடிக்கை

(நெளுக்குளம்)

ஜனாதிபதியின் பதவியேற்பு தினத்தையொட்டி வடக்கு மாகாணத்திலுள்ள விகாரைகளுக்கு புத்தர் சிலைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக தொலைபேசிமூலம் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்ட அனைத்து சாலை முகாமையாளர்களுக்கும், வடமாகாண பொதுஜன பெரமுன தொழிற்சங்க இணைப்பாளர்களுக்கும் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு இ.போ.ச பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

எனவே எதிர்வரும் 18.11.2021 அன்று ஜனாதிபதியின் பதவியேற்பு தினத்தையொட்டி ஒரு சாலைக்கு ரூபா 50 ஆயிரம் பெறுமதியான புத்தர் சிலைகளை அருகில் உள்ள விகாரைகளுக்கு வழங்குவதற்கும் அதற்கான செலவுகளை அந்தந்த சாலை ஊழியர் சங்க உறுப்பினர்களே பொறுப்பேற்க வேண்டுமெனவும் இலங்கை போக்குவரத்து சபை தலைவரினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (7-4-299)

# வயல் நிலம் விடுவிக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்

## ஜெயபுரம் மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

பத்தாண்டுகளுக்கு மேலாகப் போராட்டங்களை நடத்தியும் வயல் நிலத்தினை முழுமையாக பெற்றுக்கொள்ள முடியவில்லை என பூநகரி ஜெயபுரம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி ஜெயபுரத்தில் தென்னிலங்கையில் வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென 1983 ஆம் ஆண்டில் ஜெயபுரம் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டது.

மேட்டுக் காணிகள் வழங்கப்பட்டாலும் எதிர்காலத்தில் வயல் நிலம் வழங்கப்படும் என குடியேற்றக் காலத்தில் ஜெயபுரம் மக்களுக்கு வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.

போர்ச்சூழல் காரணமாக வயல் நிலம் துப்புரவு செய்யப்படவில்லை.

தமக்கான வயல் நிலம் விடுவிக்கப்பட வேண்டும் என கடந்த பத்தாண்டுகளாக கோரிக்கை விடுத்து வரும் நிலையில் 550 ஏக்கரில் 130 ஏக்கர் மட்டும் தற்போது விடுக்கப்பட்டுள்ளது.

ஜெயபுரம் கிராமத்தில் 700 குடும்பங்கள் தற்போது வாழ்ந்து வரும் நிலையில் வயல் நிலம் முழுமையாக விடுவிக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதே ஜெயபுரம் மக்களின் கோரிக்கையாகும்.

தற்போது 550 ஏக்கர் நிலப்பரப்பில் அடாத்தாக வெளியிடங்களைச் சேர்ந்த பலர் காணிகளை கைப்பற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக ஜெயபுரம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

(7-4-350)

## நிதி நெருக்கடி

# செலவீனங்களை கடுமையாகக் கட்டுப்படுத்த

# அரசாங்கம் முடிவு - நிதி அமைச்சர்

**(கொழும்பு)**

**கோவிட் தொற்றுநோயால் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், அரசாங்கத்தின் எதிர்பார்க்கப்படும் வருவாய் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அமைச்சரவையில் தெரிவித்துள்ளார்.**



அதனால் அரசு செலவீனங்களை கடுமையாக கட்டுப்படுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இது இந்த ஆண்டு தொடர்ச்சியான செலவுகளை ஈடு செய்ய கூட போதாது. இந்த நிலையில், அரசு நிதி ஒதுக்கப்பட்ட போதிலும், இதுவரை தொடங்கப்படாத திட்டங்கள், கொள்முதல், கட்டடங்கள் கட்டுதல், கட்டடங்களை சீரமைத்தல் போன்றவற்றை நிறுத்தி வைக்குமாறு நிதி அமைச்சகம் அமைச்சக செயலாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதுவரை நியமனக் கடிதங்கள் வழங்கப்படாத பணியிடங்களுக்கான ஆட்சேர்ப்பை நிறுத்தவும் அரசு முடிவு செய்துள்ளது. நலன்புரி நடவடிக்கைகளுக்காக அடையாளம் காணப்பட்ட பயனாளிகளின் பட்டியலை மறுபரிசீலனை செய்யவும் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு மட்டுமே மானியத்தை கட்டுப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில், அமைச்சகத்தின் செயலாளர்கள் மற்றும் துறைகளின் தலைவர்களின் ஒப்புதலுடன், நிதி அமைச்சகம் சம்பளமில்லாத கொடுப்பனவுகள் மற்றும் செலுத்தப்பட்டபில் திர்வு களை மதிப்பாய்வு செய்து உண்மையிலேயே சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு மட்டுமே வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அமைச்சகங்களின் செயலாளர்கள் தங்கள் நிறுவனங்களின் அலுவலர்களுக்கு செலுத்தப்படும் எரிபொருள் கொடுப்பனவுகளை வட்டார அடிப்படையில் வந்து சேரும் திகதியில் மட்டுமே செலுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

செலவீனங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் சேமிக்கப்படும் நிதியின் அளவு குறித்த விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நிதி அமைச்சகம் செயலாளர்களிடம் கோரியுள்ளது. (நி-5)

# தலிபான்கள் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?

## ஆசுமாரசிங்க கேள்வி

(கொழும்பு)

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கும் நிலையில், இதுகுறித்து இலங்கை அரசாங்கமும் எதிர்க்கட்சியும் அவற்றின் நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசுமாரசிங்க வலியுறுத்தியுள்ளார்.

ஆப்கானிஸ்தானின் தற்போதைய நிலவரம் தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சியின் நிலைப்பாடு குறித்துத் தெளிவுபடுத்தும் நோக்கில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தலிபான்கள் என்பது ஓர் தீவிரவாத அமைப்பாகும். அத்தகைய ஓர் தீவிரவாத அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்பாடுகளை ஏற்றுக் கொள்வதற்கான தீர்மானத்தை அரசாங்கம் ஏன் விரைந்து மேற்கொண்டது.

உலகளாவிய ஜனநாயகம் குறித்து சிந்திக்கும்போது, இது மிகவும் பாரதூரமான விடயமாகும். நூற்றுக்கு 99 சதவீதம் முஸ்லிம்கள் வாழும் ஓர் நாட்டில் சட்டதிட்டங்களை ஏற்றுக் கொண்டு உரியவாறு செயற்படும் முஸ்லிம்களை வீழ்த்தி விட்டு, தீவிரவாத இயக்கமொன்று ஆட்சியைக் கைப்பற்றும் போது அத்தகைய தீவிரவாத செயற்பாடுகளை எமது நாடு அங்கீகரிக்கின்றதா? என்ற கேள்வி எழுகின்றது. எனவே இதுவிடயத்தில் நாம் நிதானமாகவும் புத்திசாதுர்யமாகவும் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

உலகநாடுகள் பலவும் தலிபான்களின் ஆட்சியைப் புறக்கணிப்பது குறித்துக் கலந்துரையாடி வருகின்றன. பிரான்ஸ் போன்ற சில நாடுகள் அதனைப் புறக்கணிப்பதாகவும் அறிவித்துள்ளன. இவ்வாறானதொரு சூழ்நிலையில் இதுகுறித்து இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? எனவே இதுபற்றி பாராளுமன்றத்தில் கலந்துரையாடி முடிவொன்றுக்கு வர வேண்டும்.

அதேபோன்று ஆப்கானிஸ்தானின் தற்போதைய நிலவரம் தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியின் நிலைப்பாடு என்னவென்பது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெளிவுபடுத்தவேண்டும். எமது நாடு தீவிரவாத செயற்பாடுகளின் காரணமாகக் கடந்த காலங்களில் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறிருக்கையில் ஏனைய நாடுகளை தீவிரவாத அமைப்புக்கள் கைப்பற்றும்போது அதனை ஆதரிக்கும் நிலையில் இலங்கை இருக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2394

### தீசன்

**தவறேதும் செய்யாமல் தன்மானத்தை சீண்டும் நிலை வந்தால்**



**எவரையும் எங்கேயும் எடுத்தெறிறந்து பேசலாம் தப்பேயில்லை**

### நிலானி



**ஒருவேளை வீட்டோட மாப்பிள்ளையாக இருக்குமோ...**

### கம்சன்

**கம்மா போய் தினமும் கோவிலிலே சாமி கும்பிட்டாலே நாம வேண்டுறது ஒண்டும் நடக்காது**



**இதுல முகக் கவசம் போட்டுட்டு போன சாமிக்கு அடையாளம் தெரியாமல் போயிடுமே என்ன பண்ணுவேன் கடவுளே**

### கம்சாயினி

**புத்தகம் அமைதியாக இருக்கும்!
படித்தவன் ஆட்டம் போடுவான்!
பாட்டில் அமைதியாக இருக்கும்!
குடித்தவன் ஆட்டம் ஆடுவான்!
பணம் அமைதியாக இருக்கும்!
வைத்திருப்பவன் ஆட்டம் போடுவான்!
பிணம் அமைதியாக இருக்கும்!
தூக்கிச் செல்பவர்கள் ஆட்டம் போடுவார்கள்!
இந்த உலகத்திலே எல்லாமே தலைகீழாகத்தான் நடக்கும்..?
இதற்கு பெயர் தான் தலையெழுத்து!!!**

### சுதர்சன்

**வாழ்க்கைல எவ்வளவு கிடைச்சாலும்**



**இன்னும் Bestஆ எதிர்பார்க்கிறது தான் நாம நாசமா போறதுக்கு காரணம்**

### யமுனா



**மின்னல்
மின்னும் போது
அம்மாவைக் கட்டி
அணைக்கும்
குழந்தைக்குத்
தெரிகிறது.
"அம்மா அதை
விடப் பெரிய சக்தி
என்று"**

**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

# அதிபர் - ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்புக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள அதிகரிப்பு குறித்து அமைச்சரவை இணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் இருந்து பல கட்டங்களின்கீழ்இது நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# பாராளுமன்றம் இரண்டு நாட்களுக்கு கூடும் சாத்தியம்

(கொழும்பு)

கொவிட் தொற்று தீவிரமாக பரவும் நிலையில் பாராளுமன்ற கூட்டத்தொடரை தொடர்ந்து நடத்துவது ஆபத்தானது என சுகாதார பிரிவினர் பாராளுமன்ற பிரதானிகளுக்கு அறிவித்திருக்கின்றனர். அதன் பிரகாரம் பாராளுமன்றத்தை அடுத்த வாரம் இரண்டு தினங்களுக்கு மாத்திரம் வரையறுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கக்கூடும் என பாராளுமன்ற அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற அடுத்த நடவடிக்கை தொடர்பில் தீர்மானிப்பதற்காக பாராளுமன்ற நடவடிக்கை தொடர்பான கட்சி தலைவர்கள் கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற இருக்கிறது. இதன்போது இது தொடர்பாக இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ந-5)

# 21 உள்ளூர் மூலிகை பொருட்களில் தயாரிக்கப்பட்ட முகக் கவசம்



(கொழும்பு)

21 உள்ளூர் மூலிகை பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட முகக் கவசம் நேற்று ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேவிடம் கையளிக்கப்பட்டது.

பெருங்காயம், கறுவாப்பட்டை, வெங்காயம், இஞ்சி, கொத்தமல்லி, வெனிவேல், கிராம்பு, இஞ்சி மற்றும் மூல மஞ்சள் உள்ளிட்ட 21 உள்ளூர் மூலிகை பொருட்கள் பயன்படுத்தி இந்த மூலிகை முகக்கவசம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த முகக்கவசம் புதிய கண்டுபிடிப்பாக காப்புரிமை பெற்றுள்ளது மற்றும் இலங்கை தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனத்தால் (ITI) சான்றளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் புதிய கண்டுபிடிப்பு ஆணைக்குழு ஏற்பாடு செய்த சஹசக் போட்டியில், இந்த முகக்கவசம் தங்க விருதை வென்றுள்ளது.

அத்துடன் சர்வதேச போட்டியில் சிறந்த கண்டுபிடிப்பாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. (ந-5)



15,000 ஸ்புட்னிக் வி தடுப்பூசி டோஸ்கள் நேற்று அதிகாலை 12.15 மணியளவில் ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

# தங்கத்தின் விலை வீழ்ச்சி

(வோஷிங்டன்)

உலக சந்தையில் தங்கத்தின் விலையில் சிறியளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 0.3 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. தற்போது தங்கத்தின் விலை 1,813 அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

அண்மையகொரோனா பாதிப்பு காரணமாக உலகளவில் தங்கத்தின் விலை அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஒரு அவுன்ஸ் என்பது 32 கிராம், அதாவது நான்கு பவுண் ஆகும். (ந-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வீட்டு வானொலி

"நான் தொடர்ந்து இன்று ஒரு தகவல் கேட்கிறவன் சார்.நான் இன்றைக்கு உயிரோட இருக்கின்றதுக்கே நீங்கள் தான் சார் காரணம்'' அப்படி என்று என்னைப் பார்த்து சொன்னார் ஒருத்தர்.

எனக்கு ரொம்பப் பெருமையாக இருந்தது. இருக்காத பின்னே. நான் உடனே அவரைப் பார்த்து ''அப்படிங்களா சார்? ரொம்ப சந்தோஷம். வாங்க.. இப்படி உட்காருங்கள் என்றேன்'' உட்கார்ந்தார்.

''இன்றைக்குப் பலபேர் உயிரோட இருக்கிறதிற்கு HAM தான் காரணம் என்றேன்'' அப்படி என்னால் என்ன? என்று கேட்டார். சரி இவர் தான் நமக்குப் பொருத்தம் என்று முடிவு செய்து கொண்டு அதைப்பற்றி அவரிடம் விலாவரியாக எடுத்துச் சொல்ல ஆரம்பித்தேன்.

''HAM என்றால் வீட்டு வானொலி சார்'' என்றேன். ''எல்லா வானொலியையும் வீட்டிலே தானே சார் இருக்கு'' என்றார். வானொலி பெட்டி வீட்டிலே இருக்கும். வானொலி நிலையம் வீட்டுக்குள்ளே இருக்குமா? என்றேன்

''அது எப்படி முடியும்?''என்றார். ''இதிலே அது முடியும்.அதனாலே தான் இதை வீட்டு வானொலி'' என்று சொன்னேன். இது ஒரு பொழுதுபோக்கு வானொலி நிலையம். அமெச்சூர் ரேடியோ. Ham Radio. நமது வீட்டுக்குள்ளே இருந்து கொண்டே இதை உலகம் முழுவதும் உள்ளவர்கள் பலபேரிடம் நினைத்த போது பேசலாம். அரட்டை அடிக்கலாம். உதவி செய்யலாம் இந்த அமெச்சூர் ரேடியோ வைத்திருக்கிறவர்களுக்கு ''ஹாம்'' என்று பெயர்.

அமெரிக்காவிலே HYMANN, AIMY, MURREY அப்படி என்று மூன்று விஞ்ஞானிகள் இருந்தார்கள். 1911 இல் அரசாங்கத்தின் ஒப்புதலோடு இந்தப் பொழுது போக்கை ஆரம்பித்து வைத்தார்கள். என்ன இருந்தாலும் ஆரம்பித்தவர்கள் அவர்கள் இல்லையா? அதனாலே அவர்கள் மூன்று பேர் வைத்தார்கள் அவர்களை கௌரவிப்பதற்காக.

''சேர்.நானும் அந்த HAM இல் ஒரு உறுப்பினராக ஆக வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். அதற்கு என்ன செய்ய வேண்டும்'' என்று கேட்டார் என் எதிரிலே இருந்தவர். இந்திய அரசு இதற்காக ஒரு தேர்வு நடத்துகின்றது சென்னையிலே நடக்கும். தொலைத்தொடர்பு கண்காணிப்பு மைய அலுவலக அதிகாரிகள் இதை நடத்துவார்கள். 14 வயது முடிந்தவர்கள் யார் வேண்டும் என்றாலும் இந்த பரீட்சை எழுதலாம்.

தேர்விலே வெற்றி பெற்றதும் ஹாம் கருவி வைத்திருக்கிறதற்கு லைசென்ஸ் கிடைக்கும் உங்களுக்கு என்று ஒரு அடையாளக் குறியீடும் கிடைக்கும். தேர்வுக் கட்டணம் லைசென்ஸ் எல்லாம் சேர்த்து 120 ரூபா ஆகும். பரீட்சை எழுதுவதற்கு முன்னால் உங்களுக்குப் பயிற்சி வேண்டுமா? அதை அந்தந்த ஊரிலே உள்ள அமெச்சூர் ரேடியோ சங்கம் கொடுக்கும்.

சென்னையிலே உள்ளவர்கள் இது சம்பந்தமாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி என்ன என்று கேட்கிறீர்களா? கொஞ்ச நேரத்திலே சொல்லுகிறேன். அதற்கு முன்னாடி ஒரு பேப்பரும் பேனாவும் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். இப்பவே சொல்ல ஆரம்பித்தால் நீங்கள் பேனாவை தேடுவீர்களா – அட்ரஸைக் கேட்பீர்களா?

இந்த HAM வெறும் பொழுது போக்கு மட்டும் தான் என்று நினைக்காதீர்கள். கொஞ்ச காலத்திற்கு முன்னாடி மாலைத்தீவு புரட்சி நடந்த தல்லவா?. அங்கே இருந்த தகவல் தொடர்பு சாதனம் எல்லாவற்றையும் துண்டித்தார்கள். மாலை தீவிலே இருக்கக்கூடிய ஒரு ஹாம் மூலமாகத்தான் இந்த விஷயமே வெளி உலகத்திற்கு தெரிய வந்தது.

அதற்கு அப்புறம் தான் அங்கே இராணுவம் போனது. எல்லாம் சரியாகியது. போபால் விஷவாயு விபத்து முதலிலே வெளி உலகத்திற்கு தெரிய வந்தது ஒரு ஹாம் மூலமாகத்தான். ஒரு சமயம் மெட்ராஸ்லே எங்கே பார்த்தாலும் வெள்ளம். முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். ராமாவரம் தோட்டத்திலே இருந்தார். சுற்றி வர தண்ணீர். தகவல் தொடர்பு எதுவும் இல்லை.

அந்த சமயம் அவரைப் பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு வருவதற்கு உதவியது ஒரு ஹாம் தான். குஜராத்லே மூர்சி அணை உடைந்தது. கொல்லம் பக்கத்திலே ரயில் விபத்து நடந்தது. அந்த சமயத்திலேயெல்லாம் விபத்து பத்தின விவரத்தை உடனுக்குடன் தெரிவித்து பல உயிர்களை காப்பாற்றுவதற்கு உதவியாக இருந்தது ''ஹாம்''கள் தான்.

அண்டார்க்டிக்காவுக்கு நமது விஞ்ஞானிகள் போனார்கள். அங்கேயிருந்து அரசாங்கத்திற்கு தகவல்கள் துண்டிக்கப்பட்டு போய் விட்டது. அந்த சமயத்திலே திடீர் என்று தன்னுடைய கருவியிலே வந்த சிக்னலை உபயோகப்படுத்தி சேகரித்தவர் ஒரு ''ஹாம்'' தான்

ஒரு கப்பல் மூழ்கின்றது. அல்லது விமான விபத்து இந்த சமயங்களிலே அங்கேயிருந்து வருகின்ற அபாய ஒலிகளை வைத்து அது எங்கே மாட்டிக் கொண்டிருக்கும் என்று கண்டு பிடித்துவிடலாம். நமது ஊரிலே கிடைக்காத ஒரு மருந்தை அவசரத்திற்கு வெளிநாட்டிலிருந்து வரவழைத்து ஆபத்தான நிலைமையிலே உள்ள நோயாளிகள் பலபேரை இவர்கள் காப்பாற்றியிருக்கிறார்கள்.

இது மாதிரி சேவைகளிலே நீங்களும் சேர வேண்டும் என்று தோணுகிறதா? சரி இப்போது முகவரியை சொல்லுகிறேன் குறித்துக் கொள்ளுங்கள்

Madras Amateur Radio Society Post Box 4959
28 poes Garden, Chennai -86

இது தான் அட்ரஸ் உங்களுக்கு வேண்டிய மற்ற 'தகவல்' எல்லாம் அங்கே கிடைக்கும். இப்படி நான் சொல்லிக்கொண்டிருக்கும் இந்த சமயத்திலே என் எதிரிலே உட்கார்ந்தவர் என்னைப் பார்த்து ரொம்ப தேங்ஸ் சார். இன்றைக்குப் பலபேர் உயிரோட இருப்பதற்கு காரணம் ஹாம் தான் என்று சொன்னீர்கள். அது நூற்றுக்கு நூறு உண்மை. என்றார்.

''அது இருக்கட்டும் நீங்கள் ஆரம்பத்திலே என்னைப் பார்த்து இன்றைக்கு உயிரோட இருக்கிறதற்கே நான் தான் காரணம் என்று சொன்னீர்களே அது எப்படி'' என்று கேட்டேன்.

''ஓ அதுவா சேர் அன்றைக்கு ஒரு நாள் எனக்கு கடுமையான வயிற்று வலி. இன்றைக்கு காலையிலே 7.35 க்கு நீங்கள் வயிற்றுவலி வந்தால் என்ன பண்ணுவது என்கிறதைப் பற்றி தகவல் சொல்ல ஆரம்பித்தீர்கள்.

அதிர்ஷ்டவசமாக திடீர் என்னு கரண்ட் கட் ஆகி விட்டது. நீங்கள் சொன்ன வைத்தியத்தைகேட்ட முடியவில்லை. வேறேஒரு நல்ல வைத்தியர் கிட்டேபோனேன். அது தான் இன்றைக்கு இப்படி உயிரோட உங்கள் முன்னால் நிற்கிறேன்'' என்றார்




## இரண்டு சீடர்கள்



ஒருகாட்டில்கருணை வேந்தன் என்ற முனிவர் ஆசிரமத்தை அமைத்து தம் சீடர்களுக்குக் கல்விபுகட்டி வந்தார்.

அவரது சீடர்களில் எல்லாச்சீடர்களையும் விட முன்னதாக விளங்கினர் மகிமைதாசன், சந்துரு என்பவர்கள்.

ஒரு நாள் கருணை வேந்தன் அந்த இரு சீடர்களையும் அழைத்து, "நீங்கள் இருவரும் என் சீடர்களில் சிறந்தவர்களாக விளங்குகிறீர்கள்.

நீங்கள் என்னிடம் கற்க வேண்டியது எல்லாம் கற்றாகிவிட்டது. இனி உங்கள் இருப்பிடங்களுக்கு செல்லலாம்," என்றார்.

"குரு சிரேஷ்டரே! எங்களுக்கு இப்போது அபூர்வ சக்திகள் கிடைத்துள்ளன. எங்கள் சக்தி கண்டு மற்ற மனிதர்கள் எங்களைச் சீண்டி துன்புறுத்தினால் நாங்கள் கோபம் அடைந்து அவர்களைச் சபித்தாலும் சபித்து விடுவோம். எங்களுக்குச் சாபம் கொடுக்கத்தான் தெரியும். கொடுத்த சாபத்தை விலக்கும் முறை தெரியாது.

எனவே, அதையும் நீங்கள் எங்களுக்குக் கற்பித்தால் எல்லோருக்கும் நன்மை உண்டாகுமே!" என்றனர்.

அப்படியானால்தன் ஆசிரமத்தில் மேலும் ஒரு மாதம் தங்கும் படி கூறினார். இரண்டு வாரங்களுக்குப் பின், "சாபத்தை விலக்கும்முறையை அறிய கடும் உபாசனை மேற்கொள்ள வேண்டும். அது எல்லோராலும் முடியாது. உனக்கு அதனைக் கூறுகிறேன்," என்றார்.

சந்துரு மிகவும் மகிழ்ந்து போனான். அவன் தன்குருகூறியபடி உபாசனையை செய்யலானான்.

அதே சமயம்கருணை வேந்தன்மகிமைதாசனை அழைத்து, "நீ இனியும் இங்கே இருப்பதுவீணே. உன்னால் சாபத்தைவிலக்கும் முறையைக் கற்க முடியாது என்று எனக்குத் தெரிந்து போயிற்று.

(தொடரும்)

# மகாபாரதம்




சூரியனும், சந்திரனும் இல்லையெனில் உலகம் இருளில் மூழ்கி விடும். அது போல அரசன் இல்லா நாடும் கெடும்.

ஒழுங்காக நாட்டை ஆளும் அரசன் இல்லையெனில் மேய்ப்பவன் இல்லா பசு மந்தை போல நாடு சிதறிப் போகும்.

தண்ட நீதியில்லை எனில் நாட்டில் திருடர் பயம் அதிகரிக்கும். அப்பாவிகள், தர்மவான்கள் ஆகியோரை அடித்துத் துன்புறுத்திப் பொருளைக் கவர்ந்து செல்வர். உத்தமர் ஆட்சியில் மக்கள் கதவைத் திறந்து வைத்து உறங்குவர்.

விலை உயர்ந்த அணிகளை அணிந்து மகளிர் ஆடவர் துணையின்றி அச்சமின்றி வெளியில் சென்று வருவர்.

ஒரு நாட்டில் பெண்கள் பயமின்றி வாழ்கிறார்கள் எனில் அது அந்த நாட்டில் நல்லாட்சி நிலவுகிறது என்பதற்கான அடையாளமாகும்.

மன்னன் முறையே அக்கினி, சூரியன், மிருத்யு, குபேரன், யமன் ஆகிய ஐந்து தேவர்களின் வடிவமாவான்.

எனவே அரசனைப் பெருந்தெய்வமாக வணங்க வேண்டும். உடன் பிறந்தவனாயினும், மகனாயினும், நண்பனாகினும் அரசனுக்கு துரோகம் இழைத்தால் கடுமையாக தண்டிக்கப்படுவான்.

அரசனின் சினத்தீயிலிருந்து யாரும் தப்ப முடியாது. நாடாளும் மன்னன் போஜன், விராட், சாம்ராட், சத்திரியன், பூபதி என்றெல்லாம் புகழப்படுகிறான்.

அரசன் அறிவு மிக்கவரை அமைச்சராக வைத்துக் கொள்ள வேண்டும். நாட்டு மக்களைக் காப்பது அவனது தலையாய கடமை" என்று கூறினார் பீஷ்மர்.

### அரசாட்சி பற்றி பீஷ்மர்

தருமர், பிதாமகரிடம் "சிறப்பான மன்னன் செய்ய வேண்டிய செயல்கள் எவை? கிராமங்களைக் காப்பதும், ஒற்றர்களை ஏவுவதும், குடிமக்களை அன்புடையவர்களாக இருக்குமாறு செய்வதும் எங்ஙனம்? என்று கேட்டார்.

(தொடரும்)

நல்ல காரியங்களைச் செய்ய ஒருபோதும் பயப்படாதீர்கள்! தாமதமின்றி உடனே நல்ல காரியங்களைச் செய்யுங்கள்!

~ நெப்போலியன் ஹில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்து பரிகாரம் தேடுங்கள்

திருவாசகம் தந்த மணிவாசகப்பெருமான் பாண்டியமன்னனின் சபையில் முதல்மந்திரியாக இருந்தவர்.

ஒருமுறை குதிரைகள் வாங்குவதற்காகச் சென்ற மணிவாசகர், தான் கொண்டுசென்ற செல்வங்களையெல்லாம் சிவனடியார் பொருட்டுச் செலவு செய்துவிட்டு நாடு திரும்பினார்.

மணிவாசகரின் செயலால் ஆத்திரமுற்ற பாண்டியமன்னன் அவரைச் சிறையில் அடைக்கின்றான். மணிவாசகர் சிறையில் வாடுவதைப் பொறுக்கமுடியாத சிவப்பரம்பொருள் வைகை நதியைப் பெருக்கெடுக்கச் செய்கின்றார்.

பெருக்கெடுக்கும் வைகை நதியைக் கட்டுப்படுத்த அணை கட்டும் வேலைகள் பொது மக்களிடம் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

செம்மனச்செல்வி என்ற மூதாட்டி அணை கட்ட யாருமின்றி சொக்கநாதப்பெருமானிடம் முறையிட, அந்தப் பெருமானே கூலியாளாக வந்து செம்மனச்செல்வியிடம் பிட்டைக் கூலியாகப் பெற்று அணை கட்டுவதும் ஓய்வெடுப்பதுமாக இருக்கின்றார்.

அவரின் வேலை திருப்தியாக இல்லை. இதனால் பாண்டியமன்னன் அவரின் முதுகில் பிரம்பால் அடிக்கின்றான். அந்தோ! அந்தக் கூலியாள்மீது விழுந்த அடி உலக ஜீவராசிகள் அனைத்துக்கும் அடியாய் விழுந்தது.

***"தன் அடியான் மாணிக்கவாசகரைச் சிறையில் அடைத்துத் துன்புறுத்துவதன் காரணமாகவே வைகை நதியைப் பெருக்கெடுக்கச் செய்தோம், நரியைப் பரியாக்கியதும் நம் திருவிளையாடலே"*** என்று அசரீரி ஒலிக்க, பாண்டியமன்னன் தன்பிழையை பொறுத்தருளவேண்டி, மணிவாசகரைச் சிறையினின்றும் விடுதலை செய்கின்றான்.

இது புராணக் கதையாயினும் இதற்குள் இருக்கக்கூடிய உண்மைத் தத்துவத்தை உணர்ந்து அதை ஏற்றுக்கொள்வதே நீதி நிலைப்பதற்கும் தர்மம் ஓங்குவதற்கும் வழி தருவதாகும்.

அந்தவகையில், இயற்கையின் சீற்றங்களும்நோய்த்தொற்றுக்களும்எங்கோ துன்ப துயரங்கள் இழைக்கப்படுகின்றன. ஒரு பகுதிமக்கள் அவலப்படுகின்றனர். அதன் காரணமாகவே இயற்கை சீற்றமடைந்து மனிதகுலத்தை வதைக்கிறது எனப்பொருள் கொள்ளல் வேண்டும்.

அந்தவகையில் கொரோனாத்தொற்று உலகம் முழுவதையும் ஆட்டிப் படைக்கிறதாயினும் இலங்கையில் அதன் உக்கிரம் தாண்டவம் ஆடுகின்றதெனும்போது அது எதற்கானது என்று சிந்திப்பது ஆட்சியாளர்களின் கடமையாகும்.

இவ்வாறான சிந்தனை எழுமாயின் இந்த நாட்டில் மனித அவலங்கள் நடந்திருப்பதும் நடந்துகொண்டிருப்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவை.

ஆம். வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த கொடும்போரில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் இன்னமும் கண்ணீரும் கம்பலையுமாய் அலைகின்றனர்.

தவிர, மிக நீண்டகாலமாக சிறைகளில் வதைபடும் தமிழ் அரசியல்கைதிகள் விடுதலையின்றிப் பெருந்துன்பப்படுகின்றனர்.

இந்தத் துன்பமெல்லாம் சேர்ந்து இந்த நாட்டை வதைக்கின்றது, வஞ்சிக்கின்றது.

எனவே ஆட்சியாளர்கள் தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலைசெய்து இந்த நாட்டில் விளைந்த பாவத்தினின்றும் பரிகாரம் தேடவேண்டும்.

# அவசரகால விதிமுறை பிரகடனம் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## சுமந்திரன் எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகத்துக்கான அவசரகால விதிமுறைகளானது நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

அதன் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அந்தக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தி, 5 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அத்தியாவசிய உணவு பொருள் விநியோகத்துடன் சம்பந்தப்பட்ட அவசரகால விதிமுறைகள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆவது பிரிவானது தேசிய பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படும் தருணத்திலேயே பிரகடனப்படுத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் சுகாதார ரீதியான பாரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கின்ற நிலையில், அது தொடர்பான அவசரகால சட்டம் ஏன் இதுவரை பிரகடனப்படுத்தப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் கேள்வி எழுப்பினார். (ம-3)

# தனிமைப்படுத்தல் விதியை மீறி காரில் பயணித்த பொலிஸ் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறும் வகையில் இரு நபர்களுடன் காரில் பயணித்த பொலிஸ் அதிகாரிஒருவரை மாரவில பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தும்மலசூரிய பொலிஸுடன் இணைந்து பணியாற்றும் பொலிஸ் அதிகாரியே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளபோது, மாரவில பிரதான வீதியில் பயணித்த கார் ஒன்றை வீதிச் சோதனையில் இருந்த பொலிஸார் சோதனைக்குட்படுத்தினர்.

காரில் இருந்த மூவரில் ஒருவர் காரிலிருந்து இறங்கிப் பொலிஸாருக்குப் பதிலளித்த நிலையில் ஏனைய இருவரும் காரை எடுத்துக்கொண்டு தப்பிச் சென்றனர்.

பொலிஸாருக்குப் பதிலளித்த நபர், தும்மலசூரிய பொலிஸுடன் இணைந்து சேவையாற்றிவரும் பொலிஸ் அதிகாரி என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இருப்பினும், தும்மலசூரியவிலிருந்து மாரவில பகுதிக்கு அவர்கள் பயணித்தமைக்கான காரணத்தைக் கண்டறிய முடியவில்லை என்றும் இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3)

# சாதாரணதர மற்றும் உயர்தர மாணவர்களுக்கு தடுப்பூசி

(கொழும்பு)

கோவிட் தடுப்பூசியை முதற்கட்டமாக கல்விப் பொதுத் தராதர சாதாரணதர மற்றும் உயர்தர மாணவர்களுக்குச் செலுத்துவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.


பாடசாலை மாணவர்களுக்கு கோவிட் தடுப்பூசி செலுத்துவது குறித்து சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (ம-3)

# தபால் நிலையங்கள் இன்று திறக்கப்படும்

நாடு முழுவதும் உள்ள அனைத்து தபால் நிலையங்களும் உப தபால் நிலையங்களும் இன்று திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முதியோர் உதவித் தொகை மற்றும் பொது மக்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கும் திட்டத்தை முன்னெடுப்பதற்காக இன்றும் நாளையும் நாடு முழுவதும் உள்ள அனைத்து தபால் நிலையங்களையும் உப தபால் நிலையங்களையும் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



## குருவும் சீடரும்

'ஒரு கதை சொல்கிறேன் கேள். ஒரு காட்டில் சாது ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்குப் பல சீடர்கள். ஒருநாள் அவர் தமது சீடர்களிடம், 'கடவுள் எல்லோரிலும் இருக்கிறார். எனவே எல்லோரையும் வணங்குங்கள்!' என்று உபதேசம் செய்தார்.

ஒருநாள் அந்தச் சீடர்களில் ஒருவன் ஹோமத்திற்கு விறகு சேகரிக்கக் காட்டிற்குச் சென்றான். அப்போது, யார் எங்கிருந்தாலும் எல்லோரும் ஓடிவிடுங்கள். ஓடிவிடுங்கள். மதயானை ஒன்று வருகிறது' என்று யாரோ உரத்த குரலில் சத்தமிடுவது கேட்டது. எல்லோரும் ஓடினர். ஆனால் சீடன் ஓடவில்லை. யானையும் நாராயணன் என்பதுதான் அவனுக்குத் தெரியுமே! அவன் ஏன் ஓட வேண்டும்? எனவே அங்கேயே நின்றுகொண்டு, கைகூப்பிய வண்ணம் நாராயணனைத் துதிபாடி போற்றத் தொடங்கினான். யானைப்பாகன், ஓடுங்கள் ஓடுங்கள்' என்று கத்திக்கொண்டு வந்தான்.

சீடன் அதைப் பொருட்படுத்தவில்லை, நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருந்தான். கடைசியில் மத யானை துதிக்கையால் அவனைத் தூக்கி வீசி எறிந்துவிட்டுப் போய்விட்டது. உடல் முழுவதும் காயங்களுடன் சீடன் மூர்ச்சித்து விழுந்தான்.

(தொடரும்)

# மாகாண சபைத் தேர்தல்கள்

## 23

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



அதற்கிணங்க மத்திய மாகாண சபையின் 54 உறுப்பினர்களுக்காக 708 வேட்பாளர்களும், ஊவா மாகாண சபையின் 32 உறுப்பினர்களுக்காக 318 வேட்பாளர்களும் போட்டியிட்டனர். இவ்விரண்டு மாகாண சபைகளுக்குமாக மத்திய மாகாண சபையில் 75 பெண்களும் ஊவா மாகாண சபையில் 36 பெண்களும் போட்டியிட்டனர்.

மேல், தென், சப்ரகமுவ மாகாண சபைகள் சார்பாக அந்தந்த தெரிவத்தாட்சி அலுவலர்களால் அந்தந்த மாவட்ட செயலக அலுவலகங்களில் 2004.05.21 ஆம் திகதியிலிருந்து 2004.05.28 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வேட்புமனுக்கள் கையேற்கப்பட்டன. மேல் மாகாண சபைக்காக 36 வேட்புமனுக்கள் கிடைக்கப் பெற்றதோடு, அவற்றில் கொழும்பு மாவட்டம் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஒரு வேட்புமனுவும் களுத்துறை மாவட்டம் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஒரு வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டமை காரணமாக போட்டிக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்கள் 34 மாத்திரமேயாகும்.

இந்த 34 வேட்பு மனுக்களுக்குமான வேட்பாளர்களின் எண்ணிக்கை 1324 ஆக இருந்தோடு, அவற்றில் 109 பேர் பெண்களாக இருந்தனர். மேல் மாகாண சபை சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 102 ஆகும். தென் மாகாண சபைக்காக 29 வேட்புமனுக்கள் கிடைக்கப் பெற்றதோடு, போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை 588 ஆகும். அதில் 48 பேர் பெண்களாவர். தென் மாகாண சபை சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 53 ஆகும்.

வடமத்திய மாகாண சபைக்காக 19 வேட்புமனுக்கள் கிடைக்கப் பெற்றதோடு, போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை 368 ஆகும். அதில் 16 பேர் பெண்களாவர். வடமத்திய மாகாண சபை சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 31 ஆகும். சப்ரகமுவ மாகாண சபைக்காக 35 வேட்புமனுக்கள் கிடைக்கப்பெற்றதோடு, அவற்றில் இரத்தினபுரி மாவட்டம் சார்பாக ஒரு சுயேச்சைக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு வேட்புமனு நிராகரிக்கப்பட்டமையால் தகுதி பெற்ற வேட்பு மனுக்கள் 34 மாத்திரமேயாகும். இதற்கிணங்க போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை 728 ஆகும். அதில் 57 பேர் பெண்களாவர். சப்ரகமுவ மாகாண சபை சார்பாகத் தேர்ந்தெடுக்கப் படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 42 ஆகும்.

வேட்புமனுக் கையேற்புகள் முடிவடைந்ததைத் தொடர்ந்து அந்தந்த தெரிவத்தாட்சி அலுவலர்களால் சட்டத்தின் 22(1) ஆம் பிரிவின் கீழ் வாக்கெடுப்புகள் தொடர்பான அறிவித்தல்கள் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்படல் வேண்டும். உரிய சட்டத்தின் 22(1) (இ) ஆம் பிரிவிற்கிணங்க வாக்கெடுப்புக்கள் தொடர்பான அறிவித்தல்கள் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 5 வாரங்களுக்குக் குறையாமலும், 8 வாரங்களுக்கு கூடாததுமான ஒரு சனிக்கிழமை தினத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படல் வேண்டும். அதற்கிணங்க வடமேல் மாகாணத்தின் மாகாண சபைக்காக 2004.04.24 ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்பட முடிவெடுக்கப்பட்டதோடு ஏனைய ஆறு மாகாண சபைகளுக்குமாக ஒரே தினத்தில் வாக்கெடுப்பை நடத்துவதற்கு குறித்தொதுக்க முடிந்த மிகக் கிட்டிய தினமாக 2004.07.10 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டது.

எட்டாவது மாகாணமான வடக்கு கிழக்கு மாகாண சபைக்குத் தேர்தல்கள் இடம் பெறவில்லை. இம் மாகாணசபை 1990 மார்ச முதல் மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்தது.

இத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி(ஐ.ம.சு.மு.), ஐக்கிய தேசியக்கட் சி (ஐ.தே.க.), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC), மலையக மக்கள் முன்னணி (ம.ம.மு.), ஐக்கிய சோசலிசக் கட்சி, மேல் மாகாண மக்கள் முன்னணி (மேமாமமு), சுயேச்சைகள், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (இ.தொ.க.), தேசிய அபிவிருத்தி முன்னணி, சிங்கள மகா சம்மத பூமி புத்ர கட்சி, ஜனநாயக ஐக்கிய முன்னணி (ஜ.ஐ.மு), ஐக்கிய லலித் முன்னணி, புதிய இடது முன்னணி, இலங்கை லிபரல் கட்சி, ஐக்கிய சிங்கள பாரிய பேரவை, ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டணி, இலங்கை முஸ்லிம் கட்சி, இலங்கை முன்னேற்ற முன்னணி, மக்கள் விடுதலை ஒற்றுமை முன்னணி, ருகுண மக்கள் கட்சி, தேசிய ஜனநாயகக் கட்சி, இலங்கை தேசிய முன்னணி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, தேசிய மக்கள் கட்சிகள் போட்டியிருந்தன.

பல கட்சிகள் சில மாகாணங்களில் மட்டுமே போட்டியிட்டிருந்தன. செல்லுபடியான வாக்குகள்-5,832,708, நிராகரிக்கப்பட்ட வாக்குகள்-380,055, அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்-6,212,763 , பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள்-1,121,889, வாக்களிப்பு வீதம் 55.86% ஆகும்.

இலங்கையின் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி ஏழு மாகாண சபைகளையும் கைப்பற்றியது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட மத்திய, வடமேல் , சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் தனித்தும், மத்திய, ஊவா மாகாணங்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தும் போட்டியிட்டது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சப்ரகமுவ மாகாணத்தில் தனித்தும், ஏனையவற்றில் ஐ.தே.கவுடன் இணைந்தும் போட்டியிட்டது. இத் தேர்தல் முடிவுகள் அட்டவணைகள் 10 A-G இல் காட்டப்பட்டுள்ளன.

**மாகாண சபைத்தேர்தல் 2004- மேலோட்டமானமுடிவுகள்**

| கட்சி / கூட்டணி | வாக்குகள் | % | இடங்கள் |
|---|---|---|---|
| ஐக்கியமக்கள்சுதந்திரக்கூட்டணி | 3,364,239 | 57.68% | 227 |
| ஐக்கியதேசியக்கட்சி | 2,197,892 | 37.68% | 140 |
| ஸ்ரீலங்காமுஸ்லிம்காங்கிரஸ் | 119,796 | 2.05% | 7 |
| மலையகமக்கள்முன்னணி | 52,639 | 0.90% | 3 |
| மேல் மாகாணமக்கள்முன்னணி | 15,871 | 0.27% | 1 |
| இலங்கைதொழிலாளர்காங்கிரஸ் | 10,720 | 0.10% | 1 |
| ஜனநாயகஐக்கிய முன்னணி | 6,219 | 0.11% | 1 |
| செல்லுபடியானவாக்குகள் | 5,832,708 | | 380 |

**அட்டவணை 10A- மேல் மாகாண சபைத் தேர்தல் 2004**

| மாவட்டம் | கட்சிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஐமசுமு | ஐதேக | ஜஐமு | மேமாமமு | SLMC | மொத்தம் |
| கொழும்பு | 21 | 18 | 1 | 1 | 2 | 43 |
| கம்பஹா | 24 | 14 | - | - | 1 | 39 |
| களுத்துறை | 12 | 7 | - | - | 1 | 20 |
| Bonus | 2 | - | - | - | - | 2 |
| மொத்தம் | 59 | 39 | 1 | 1 | 4 | 104 |

**அட்டவணை 10B**
**மத்திய மாகாண சபைத் தேர்தல் -2004**

| மாவட்டம் | கட்சிகள் | | | |
|---|---|---|---|---|
| | ஐமசுமு | ஐதேக | மமமு | மொத்தம் |
| கண்டி | 16 | 14 | - | 30 |
| மாத்தளை | 6 | 4 | - | 10 |
| நுவரெலியா | 6 | 8 | 2 | 16 |
| Bonus | 2 | - | - | 2 |
| மொத்தம் | 30 | 26 | 2 | 58 |

**அட்டவணை 10C**
**தென் மாகாண சபைத் தேர்தல் 2002**

| மாவட்டம் | கட்சிகள் | | |
|---|---|---|---|
| | ஐமசுமு | ஐதேக | மொத்தம் |
| காலி | 14 | 9 | 23 |
| மாத்தறை | 12 | 6 | 18 |
| ஹம்பாந்தோட்டை | 8 | 4 | 12 |
| Bonus | 2 | - | 2 |
| மொத்தம் | 36 | 19 | 55 |

(தொடரும்...)

## 9 ஆயிரத்தை...

துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 9,185 ஆக அதிகரித்துள்ளது.

இதனையடுத்து, இலங்கையில்கோவிட் மரணங்களின் எண்ணிக்கை நேற்று 9,000ஐ கடந்தது.

உயிரிழந்தவர்களில் 94 பெண்களும் 100 ஆண்களும் உள்ளடங்குகின்றனர். (ம-3)

## அபாய கட்டத்தில்...

கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்பு களைப் பேணியோர், வவுனியா வைத் தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற் கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்றி ரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் 299 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றாளர்களை கோவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும் வவுனியாவில் கோவிட் தொற்று காரணமாக நேற்று நான்கு பேர் மரணமடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் கோவிட் தொற்று தீவிரம் அடைந்துள்ள நிலையில் பலரும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் கோவிட் தொற்றுக் காரணமாக வவுனியாவின் குடியிருப்பு, தாண்டிக்குளம், தேக்கவத்தை, கோயில் குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 99, 86, 39, 76 வயதுகளையுடைய நான்கு பேரே மரணமடைந்தவர்களாவர்.

குறித்த நான்கு பேரது சடலங்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்கு சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-3,250,299)

## கைதடி முதியோர்...

பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையின்போதே 43 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய 41 முதியவர்களுக்கும் 2 ஊழியர்களுக்கும் என மொத்தமாக 43 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-3,18,33)

## சுவர் இடிந்து...

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

நேற்று முன்தினம் மாலை குறித்த சிறுவன் தனது வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த நிலையில் கொட்டகையின் சுவர் ஒன்று இடிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் படுகாயமடைந்த சிறுவன் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். எனினும் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளான்.

சம்பவத்தில் பம்பைமடு பகுதியைச் சேர்ந்த சயந்தன் கீர்த்திகன் என்ற ஒன்றரை வயது சிறுவனே உயிரிழந்தவனாவான்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,299)

## +4,221...

சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 440,302 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2,164 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 374,156 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## 24 மணி நேரத்...

மொத்தமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2020 மார்ச்சிலிருந்து நேற்று மாலை வரை 12,460 பேர் கோவிட்-19 நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலத்தைவிட தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதோடு இறப்புக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. மேலும் இற்றைவரையான கணக்கெடுப்பின்படி 243 நபர்கள் இறப்புக்குள்ளாகியுள்ளார்கள்.

அத்துடன், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தின்கீழ் 5,173 குடும்பங்களைச் சேர்ந்த 15,164 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஜே/26 கிராமமும் மருதங்கேணிப் பிரதேச செயலாளர் பிரிவில் ஜே/432, ஜே/433 கிராம அலுவலர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள நிலையில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் இறுக்கமாக கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்க வேண்டிய தேவையுள்ளது.

சுகாதார அமைச்சின் வழிகாட்டல் மற்றும் கோவிட் செயலணியின் வழிகாட்டலுக்கு அமைய ஒன்றுகூடல்கள், திருமண நிகழ்வுகள் மற்றும் ஏனைய நிகழ்வுகளும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மிக அவசிய தேவைகளுக்கு மட்டுமே பொதுமக்கள் வீட்டிலிருந்து வெளியே வரவேண்டும். அதேவேளை சுகாதார நடைமுறைகளான முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணல், தேவையற்ற நடமாட்டம், ஒன்றுகூடல்களைத் தவிர்க்க வேண்டும்.

எனவே இந்த நடைமுறைகளைப் பின்பற்றி எம்மையும் குடும்பத்தையும் சமூகத்தையும் பாதுகாக்க வேண்டும் என அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில் தடுப்பூசி நடவடிக்கைகளும் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

அந்தவகையில் குறிப்பிட்ட வயதிற்கு மேற்பட்டவர்களில் மொத்தமாக 289,855 பேர் தமது தடுப்பூசியைப் பெற்றுள்ளார்கள். தொடர்ச்சியாகத் தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

அத்தோடு எழுந்து நடமாட முடியாத வயோதிபர்களுக்கு வீடுவீடாகச் சென்று தடுப்பூசி போடப்படுகிறது.

இதில் இராணுவத்தினரும் தற்போது கைகோர்த்து தடுப்பூசிநடவடிக்கைகளுக்கு உதவ முன்வந்துள்ளார்கள்.

தடுப்பூசிகளை விரைந்து பெற்றுக் கொள்வது எமது பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்தும். எமது இறப்புக்களை தவிர்க்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது.

ஆகவே பொதுமக்கள் அரசாங்கத்தின் அறிவுறுத்தலின்படி தங்களையும் சமூகத்தையும் பாதுகாக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ம-3,18,33)

## ரூபாயின்...

தது.

அமெரிக்க டொலரின் வாங்கும் விலை ரூ 198.90, விற்பனை விலை ரூ 204.89 என இலங்கை மத்திய வங்கி நேற்று அறிவித்தது.

நாட்டின் வரலாற்றில் அமெரிக்க டொலருக்கு எதிரான அதிக விற்பனை மதிப்பு இதுவாகும். (ம-3)

## எல்லை தாண்டிய...

யுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்றைய தினம் கடலுக்கு தொழிலுக்காகச் சென்ற இரண்டு படகுகளை எல்லை தாண்டிய இந்திய இழுவைமடி படகு மோதியதில் குறித்த படகுகள் பலத்த சேதமாகியுள்ளதாகவும் சேதமான ஒரு படகில் சென்ற இருவரும் தெய்வாதீனமாக கரை சேர்ந்துள்ளதாகவும் மற்றைய படகு கடலில் சேதமடைந்த நிலையில் காணப்படுவதாகவும் ஆனால் அதில் சென்ற இரண்டு பேரையும் கடலில் காணவில்லை என்றும் தேடும் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராகவன் மற்றும் வளயா எனும் இருவருமே இதுவரை கரை திரும்பவில்லை என மீனவர் சங்கத் தகவல்கள் தெரிவிப்பதுடன் மீனவர்களால் தேடப்பட்டு இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில் தற்போது கடற்படை தேடிவருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3,100)

## ஆட்சி செய்ய...

விக்கையில்,

இன்று கடைகளில், சதொச நிலையங்களில் பொருட்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றன.

அந்த பொருட்களுக்காக மக்கள் வரிசைகளில் நிற்கின்றார்கள். பொருட்களை வாங்கச் சென்றவுடன் கட்டுப்பாடுகளை விதிக்கிறார்கள்.

எங்கள் நாட்டில் என்ன நடக்கின்றது? அந்நிய செலாவணியை அதிகரிப்பதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? விரைவாக சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடுங்கள்.

அவர்களிடம் நாட்டில் நிலவும் பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வுகாண உதவி கேளுங்கள். எதிர்க்கட்சியினர் நாங்களும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றோம்.

இந்த நாட்டை கட்டியெழுப்புங்கள். இந்த நாடு உடைந்து விழுவதைபார்த்துக் கொண்டு அதற்கு இடம்கொடுத்துக் கொண்டு, அரச பலத்தை பெற்றுக்கொள்ள எமக்கு எந்த எதிர்பார்ப்பும் இல்லை.

அபிவிருத்தியடைந்த, சௌபாக்கியமான ஒரு நாடு, நாடு அபிவிருத்தி அடையும் ஒரு யுகம், மக்கள் உயிர்கள் காப்பாற்றப்படும் ஒரு யுகம்தான் எமக்கும் தேவை.

அதனால்தான் நான் உட்பட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து, அனைவருடைய ஒத்துழைப்புடனும் மக்கள் நலன் கருதிபல வேலைத் திட்டங்களை செய்து வருகின்றோம்.

நான் இந்த அரசாங்கத்திடம் தெளிவாக ஒரு வேண்டுகோளை விடுகின்றேன். உங்களுக்கு இந்த நாட்டை ஆட்சி செய்ய முடியாவிட்டால், நாட்டு மக்களின் வாழ்க்கையை பாதுகாக்க முடியவிட்டால், உங்களுடைய பிழையான தீர்மானங்களால் உருவான பொருளாதாரப் பிரச்சினையை தீர்க்க முடியாவிட்டால், அந்த சந்தர்ப்பத்தைஎங்களுக்கு தாருங்கள் என நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த நாட்டை கட்டியெழுப்ப எங்களுக்கு முடியும். மக்களின் வாழ்வாதாரத்தை பலப்படுத்த எங்களால் முடியும். மக்களை வாழவைக்க எங்களால் முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## ஊரடங்கை...

மானிக்கவில்லை என கோவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா ஊடகங்களிடம் தெரிவித்தார்.

கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்ற நிலையில் ஊரடங்குச்சட்டத்தை தளர்த்துவது தொடர்பில் உடனே முடிவு எடுக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சுகாதாரப் பிரிவினருடன் இது தொடர்பில் இந்த வாரம் கலந்துரையாடப்படும் எனவும் அதன்பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் இராணுவத் தளபதி மேலும் கூறினார். (ம-3)

## வடக்கில்...

துள்ளனர்.

அந்த வகையில் கொரோனாவால் யாழில் 8 பேர், வவுனியாவில் 4 பேர், கிளிநொச்சியில் 3 பேர், முல்லையில் ஒருவர் உயிரிழந்துள்ளனர்.

அவற்றின் அடிப்படையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சை விடுதியில் சிகிச்சை பெற்றுவந்த 85 வயதுப் பெண், உயிரிழந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பரிசோதனைக்காக நேரடியாக பிசிஆருக்காக உள்வாங்கப்பட்ட 64 வயது ஆண், 47 வயது பெண் மற்றும் ஆண் குழந்தை ஒன்று (அறிக்கையில் பெயர், வயது குறிப்பிடப்படவில்லை) ஆகியோரும்,

கிளிநொச்சிமாவட்ட வைத்தியசாலையின் ஊடாக பிசிஆர் பரிசோதனைக்கு அனுப்பப்பட்ட 73, 83 வயது பெண்கள், 72 வயது ஆண், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை ஊடாக பரிசோதனைக்கு அனுப்பப்பட்ட 67 வயது ஆண், வவுனியா மாவட்ட வைத்தியசாலை ஊடாக பரிசோதனைக்கு அனுப்பப்பட்ட 99, 86, 39, 76 வயதுகளையுடைய நான்கு பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் கொரோனாவால் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த சுங்கானையைச் சேர்ந்த 64 வயதுடைய பெண் உயிரிழந்திருந்தார்.

அதேவேளை, தென்மராட்சிகுடமியன் பகுதியில் வசித்துவந்த 97 வயது முதியவர் உயிரிழந்த நிலையில் அவருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தது.

மேலும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 100 வயதுடைய முதியவர், அல்வாயைச் சேர்ந்த 49 வயதுடைய பெண் ஆகியோரே வீடுகளில் உயிரிழந்த நிலையில் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3,18,30,33,60,250,299)

zoom மூலமான
வர்த்தக பாட வகுப்புக்கள்
O/L மாணவர்களுக்கு தரம் 10 & 11 சகல பாட அலகுகளும் 4 மாதங்களுக்குள் முழுமையாகக் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு :
ஆசிரியர் P.சசீகரன்
076 646 3860
(7834)

German, Holland(Netherland), Swiss, Ostria நாடுகளுக்கான மொழி வகுப்புக்கள் German Embassy இன் A1 Certificate இற்கு ஏற்றவாறு நடைபெறுகின்றது.
தொடர்புகளுக்கு : Mrs.P.Kajenthini
077 160 4823
Jaffna
(7838)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் எழுமாற்றுப் பரிசோதனை

## 21 பேருக்கு கொரோனா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நேற்று எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் சோதனையில் 21 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியானது.

வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வந்த 31 பேரிடம் நேற்று அன்டிஜன் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் 21 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியானது.

நேற்று சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பெருமளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

(ம-03)

# மரண அறிவித்தல்



பிறப்பு 29 – 10 – 1952

இறப்பு 29 – 08 – 2021

## திருமதி வாகேஸ்வரி நடராசா

(வேவி)

வளலாயைப் பிறப்பிடமாகவும் இல. 19, 5ஆம் ஒழுங்கை, அரசடி விதி, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வாகேஸ்வரி நடராசா கடந்த 29.08.2021 (ஞாயிற்றுக்கிழமை) இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.09.2021) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

இல. 19, 5ஆம் ஒழுங்கை.
அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:-
குடும்பத்தினர்

காணி விற்பனைக்கு




நீர்வேலி தெற்கு. கரந்தன் பகுதியில் 11 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நிலப்பரப்பு - 1 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் கரந்தன் சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரம்.

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
( தரகர் தேவையில்லை )
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(7837)

077 814 7389
077 614 7333

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# மரண அறிவித்தல்

## அப்பாப்பிள்ளை இராமசாமி

(அப்பர் – தேங்காய்க் கடை, சங்கானை)



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாப்பிள்ளை இராமசாமி நேற்று (31.08.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, பண்டிதர் ஆறுமுகம், பொன்னம்மா, மனோன்மணி, பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நிர்மலாதேவி, லோகேஸ்வரிதேவி, ஜெயதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் முத்துலிங்கம், குகதாசன், சிவபாலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பாபுஜி, சஜீவன், சங்கீதா, நிரோஜன், கார்த்திகா, அபிராமி, சாரங்கன், ஆரணி, அலெக்ஸ், சோபிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.09.2021) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-2603)

பண்ணாகம்,
சுழிபுரம்.
077 400 2202

தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.